ஸ்ரீராமாநுஜன் 147

சென்னை ஸத்க்ரந்தப்ரகாசன ஸபா மூலமாக மாதந்தோறும் வெளிவரும்பத்திரிகை.

ஆசிரியர்: ஸ்ரீ காஞ்சீ. P. B. அண்ணங்கராசாரியர்.

ஸம்புடம் 13	1961ஸூ மார்ச்சுமீ சார்வரிஸூ பங்குனிமீ	ஸஞ்சிகை 3

திருவாய்மொழி நூற்றந்தாதி—38

ஏறு திருவுடைய ஈச னுகப்புக்கு*
வேறுபடி லென்னுடைமை மிக்கவுயிர்—தேறுங்கால்*
என்றனக்கும் வேண்டா வெனுமாறன் தாளை நெஞ்சே*
நந்தமக்குப் பேறாக நண்ணு.

ஏறு திருஉடைய	தனது திருமார்பில் ஏறி வீற்றிருக்கின்ற பெரிய பிராட்டியாரை யுடையனான	தேறுங்கால்	ஆராயுமிடத்து
		என் தனக்கும் வேண்டா எனும்	எனக்கும் வேண்டியதில்லை யென்று வெறுத்துரைத்த
ஈசன்	எம்பெருமானுடைய	மாறன்	ஆழ்வாருடைய
உகப்புக்கு	வேண்டுதலுக்கு	தாளை	திருவடிகளை
வேறுபடில்	விபரீதமானால்	நெஞ்சே	மனமே!
என் உடைமை	மணிமாமை முதலிய ஆத்மீயங்களும்	நம் தமக்கு	நமக்கு
மிக்க	இவற்றினும் உயர்ந்த	பேறு ஆக	ப்ராப்யமாக
உயிர்	ஆத்மாவும்	நண்ணு	விரும்புவாயாக.

*சீலமில்லாச் சிறியனேலு மென்கிற கீழ்த் திருவாய்மொழியில் *கூவிக் கூவி நெஞ்சுருகிக் கண்பனி சோர நின்று *எப்பொழுதும் கண்ணநீர் கொண்டு ஆவி துவர்ந்து துவர்ந்து *நள்ளிராவும் நன்பகலும் ஓலமிட்டழைத்துக் கதறின விடத்திலும் எம்பெருமான் வந்து முகம் காட்டாமையாலே ப்ராப்தனாய் சீலவானாய் விரோதிகளைக் கிழங்கெடுக்க வல்லனாயிருக்கின்ற அவன் இந்த நிலைமையிலும் வந்து முகங் காட்டாதது இத்தலையை வேண்டாமையாலன்றோ; அவனுக்கு வேண்டாத ஆத்மாத்மீயங்கள் எனக்குத்தான் எதுக்கு? என்று வெறுத்து அவற்றில் நசையற்றபடியை *ஏறாளு மிறையோனில் பேசின பராங்குசனுடைய பதவிணையே நமக்குப் பரம புருஷார்த்த மென்றதாயிற்று.

கேட்டாரெல்லாரும் நீராம்படியாகக் கீழ்த் திருவாய்மொழியிலே ஆழ்வார் கூப்பிடச் செய்தேயும் எம்பெருமான் வந்து முகங் காட்டிற்றிலன். அதனால் எம்பெருமான் தம்மை வேண்டாவென்று வெறுத்திருப்பதாக நிச்சயித்தார். அவனுடைய வெறுப்புக்கு இலக்கான இந்த ஆத்மாவும் ஆத்மீயங்களும் நமக்கு எதுக்கு? அவனுக்கு வேண்டாதவை நமக்குத்தான் வேணுமோவென்று ஆத்மாத்மீயங்களை யெல்லாம் உபேக்ஷிக்கிறார் *ஏறாளு மிறையோனுந் திருவாய்மொழியில்.

ஆழ்வார் ஜநககுல ஸுந்தரியோடே யொத்திருப்பர் என்றுயிற்று நம்முதலிகள் அறுதி யிட்டிருக்கும்படி. அப்பிராட்டி அசோகவனத்திலிருந்தபோது *நஹி மே ஜீவிதேநார்த்த: நைவார்த்தைர் ந ச பூஷணை: । வஸந்த்யா ராக்ஷஸீமத்யே விநா ராமம் மஹாரதம் ।। நஹி மே ஜீவிதேநார்த்த: நைவார்த்தைர் ந ச பூஷணை:, வஸந்த்யா ராக்ஷஸீமத்யே விநா ராமம் மஹாரதம்.'' என்று ஆத்மாத்மீயங்களை யெல்லாம் வெறுத்தாள். பெருமாள் விரும்பாதே ராக்ஷஸிகள் நடுவே சிறையிருக்கின்ற வெனக்கு உயிர் உடைமை முதலியவற்றால் என்ன பலன்? என்றாள். அந்த நிலைமைதானே இப்போது ஆழ்வார்க்கு முண்டாயது.

இத்திருவாய்மொழியைப் பரிபூர்ணமாகத் தமது ஸ்தோத்ரரத்நத்தில்—'' ந தேஹம் ந ப்ராணாந் ந ச ஸுகமசேஷாபிலஷிதம் ந சாத்மாநம் நாந்யத் கிமபி தவ சேஷத்வவிபவாத் । பஹிர்பூதம் நாத! க்ஷணமபி ஸஹே, யாது சததா விநாசம் தத் ஸத்யம் மதுமதந! விஜ்ஞாபநமிதம் ।। ந தேஹம் ப்ராணாந் ந ச ஸுகமசேஷாபிலஷிதம் ந சாத்மாநம் நாந்யத் கிமபி தவ சேஷத்வவிபவாத். பஹிர்பூதம் நாத! க்ஷணமபி ஸஹே, யாது சததாவிநாசம் தத் ஸத்யம் மதுமதந! விஜ்ஞாபநமிதம்.'' என்றருளிச்செய்த ச்லோகம் இங்கு அநுஸந்திக்கத் தக்கது. (இதன் கருத்து:— மதுஸூதநனே! திருமுன்பே ஸத்யமாக ஒரு விண்ணப்பம் செய்கிறேன், கேட்டருளவேணும்: அஃது என்னென்னில்; '' சரீரமாத்யம் கலு தர்மஸாதநம் '' என்கிறபடியே தர்மாநுஷ்டானங்களுக்கு முதல் ஸாதனமான சரீரமும் அதற்குத் தாரகங்களான பிராணன்களும், பிராணிகளெல்லாரும் மிகவிரும்பும் ஸுகமும், இவை யெல்லாவற்றிற்கும் ஆச்ரயமாக நிற்கும் ஆத்மாவும், மற்றும் புத்ர மித்ர களத்ராதிகள் எதுவாகிலும் உன்னுடைய சேஷத்வத்திற்கு உபயுக்தமாகில் வேண்டும்; அதற்குப் புறம்பாகில் வேண்டா; இவை யெல்லாம் உருமாய்ந்து போகட்டும், இது கழுத்துக்கு மேலே சொல்லுகிறவார்த்தையன்று; இது பொய் சொன்னதாகில் உன்னிடத்தில் மது என்னும் அசுரன் பட்டபாடு படுவேனத்தனை—என்பதாம்.

பகவத் கைங்கர்யத்திற்கு உறுப்பல்லாதவை த்யாஜ்யம் என்கிற சாஸ்த்ரார்த்தம் வெளியிடப்பட்டதாகும். ஆண்டாளும் ''கொள்ளும் பயனொன்றில்லாத கொங்கை தன்னைக் கிழங்கோடும், அள்ளிப் பறித்திட்டு அவன் மார்விலெறிந்து என்னழலைத் தீர்வேனே'' என்றருளிச் செய்தது இங்கே நினைக்கத்தகும்.

இந்தத்திருவாய்மொழி ஆழ்வார் தாமான தன்மையிலே நின்று அருளிச்செய்வதன்று; நாயகீ ஸமாதியாலே அருளிச்செய்ததென்னுமிடம் ''மணிமாமை குறைவிலமே'' ''மேகலையால் குறைவிலமே'' ''வரிவளையால் குறைவிலமே'' என்பவற்றால் விளங்கும். திருமங்கையாழ்வாரும் பெரிய திருமடலில் '' கன்னவிலுங் காட்டகத்தோர் வல்லிக்கடிமலரின், நன்னறு வாசம் மற்றாரானு மெய்தாமே, மன்னும் வறுநிலத்து வாளாங்குகுத்ததுபோல், என்னுடைய பெண்மையும் என்னலனு மென்முலையும், மன்னுமலர் மங்கைமைந்தன், கணபுரத்துப் பொன்மலைபோல் நின்றவன்றன் பொன்னகலம் தோயாவேல், என்னிவைதான் வாளாவெனக்கே பொறையாகி, முன்னிருந்து மூக்கின்று மூவாமைக்காப்பதோர் மன்னுமருந்தறிவீரில்லையே'' என்றருளிச்செய்தது காண்க. ... . (38)

வதந்தியில் செவிப்பட்ட வானமாமலைச் செய்தி

ஸ்ரீமதஹோபில ஜீயர் சென்ற மாதத்தில் வானமாமலைக்குச் சென்றிருந்தாராம் அங்கு ஏதோ ப்ரஸங்க மேடையில், பகவத் விஷய மெனப்படுகிற ஈடுமுப்பத்தாறாயிரப் படியைப் பற்றின ப்ரஸங்கத்தை வருவித்துக்கொண்டு பேசினாராம்—

“தென்னாசார்ய ஸம்ப்ரதாயத்திற்கு அஸாதாரணமான ஈட்டை தேசிக ஸம்ப்ரதாய யாதாஸ்யமான மடம் எப்படி ப்ரவசநம் செய்து வருகிறதென்று சிலர் கேட்கிறார்கள். அவர்களுக்குத் தெரிவிக்கிறேன்; ஈடு தென்னாசார்ய ஸம்பிரதாயத்திற்கு அஸாதாரணமென்று சொல்லுவது ஸரியல்ல; அந்த க்ரந்தம் முற்றிலும் வடகலை ஸம்பிரதாயத்திற்குத்தான் பொருத்தமானது; தேசிக ஸம்பிரதாயத்திற்கு முரண்பட்டதன்று என்பதை நான் உபபாதிக்கிறேன். பிராட்டிக்கு உபாயத்வமில்லையென்று தென்னாசாரியர்கள் வாதிக்கிறார்கள்; ஈட்டில் பிராட்டிக்கு உபாயத்வம் ஊர்ஜிதம் செய்யப்பட்டிருக்கின்றது. அப்படியுள்ள விடங்களை இதோ காட்டுகிறேன் [என்று சொல்லிச் சிலவிடங்களைக் காட்டி] இங்கே யிருக்கின்ற வித்வான்களில் யாராவது இதற்கு மறுப்புச் சொல்லுவதானால் சொல்லலாம்.” என்றாராம். மடவித்வான்கள் சிலர் அங்கு வந்திருந்தும் வாய் திறவாமலே யிருந்து விட்டார்களாம். இதனால் அஹோஜீயர் அநாயாஸமாக வெற்றி பெற்றுவிட்டாராம்.

இப்படியாக ஒரு ப்ரவாதம் நமது காதில் விழுகிறது. இதன் உண்மை நமக்கு நேராகத் தெரியாது. ஒருவ ரிருவரன்றிக்கே பலர் சொல்லக் கேட்டோம். வஸ்துத: இது அஸத்தான வார்த்தையாயிருந்தால் மேலே நாம் எழுதுவதை யாரும் குறிக்கொள்ள வேண்டா. யதார்த்தமாயிருந்தால் நம் மறுப்புரைகளை உலகமெல்லாம் குறிக்கொள்க.

அஹோபிலமடம் தென்கலை ஸம்ப்ரதாயமாக விளங்கிவந்த காலத்தில் மடத்தார்க்கு ஈட்டில் ப்ராவண்யமும் தத்ப்ரவசநாநுஷ்டாநமும் இருந்து வந்ததாகக் கேள்வியுண்டு. ஸம்ப்ரதாயம் மாறி, தனியன்களையும் முற்றிலும் மாற்றியான பின்பு ஈட்டில் த்வேஷமும் தோஷோத்பாவநங்களும் மல்கி வரும தொழிய தத்ப்ரவசநப்ரஸக்தி லேசமும் கிடையாது. ஈட்டை தூஷித்த வியாஸங்கள் பலவற்றுக்கு ந்ருஸிம்ஹ ப்ரியா இடமளித்து வருகின்றதென்பது அபலபிக்க முடியாத விஷயம். ஆகவே ஈட்டு ப்ரவசநம் மடத்தில் நடந்து வருவதாக வாசகப்ரதாரணம் செய்யவே இந்த ப்ரஸங்கோத்பாவநமென்பதை நுண்ணிதினுணர்க.

தேசிகன் தம்முடைய க்ரந்தங்களில் ஸ்தாபித்தருளி யிருக்கிற அர்த்தங்களை முநித்ரயத்தாரும் தழுவினவர்களல்லர், மடத்தாரும் தழுவினவர்களல்லர் என்பதை நாம் பல நூல்களில் பரக்க நிரூபித்திருக்கிறோம். ஸமீப காலத்தில் நாம் வெளியிட்ட தேசிகஹ்ருதயமென்கிற நூல் அவற்றுள் சிகரமானது. அதிலுள்ள நமது நிரூபணங்கள் அசைக்கவும் முடியாதவை யென்பதை நாமே சொல்லிக் கொள்ள வேணுமோ? தாராளமாகச் சொல்லிக்கொள்ளலாம்.

ஈட்டில் பிராட்டிக்கு உபாயத்வம் ஊர்ஜிதம் செய்யப்பட்டிருக்கின்றதென்று இவர் தாம் உபபாதிக்க ப்ரஸங்க மேடையில் ஸந்நிஹிதர்களாயிருந்த மடவித்வான்கள் மறுக்க முன்வரவில்லையென்று சொல்லப்படுவது உண்மையாயிருந்தாலும் ஆரோபிதமாயிருந்தாலும் அதனாலென்னாகும்? இங்கு முக்கியமாக இரண்டு விஷயம் உலகம் தெரிந்துகொள்ள வேண்டும்;—(1) எம்பெருமானும் உபாயம், பிராட்டியு முபாயம் என்றால் இதற்கு என்ன அர்த்தம்? மோக்ஷ ஸாம்ராஜ்ய மளிப்பதில் எம்பெருமானுக்குப்போலே பிராட்டிக்கும் அப்ரதிஹதமான ஶக்தி உண்டு—என்பதுதானே அர்த்தம். பிராட்டிக்குப் புருஷகாரத்வமுண்டு என்றிசைந்தான பின்பு அவளுக்கு உபாயத்வமுமுண்டென்று வாய் திறக்க வழியே

கிடையாது. உபாயத்வமாவது—தானே கொடுக்க ஶக்தியுடைத்தாகை. அஃதிருக்குமாகில் "அசரண்ய சரண்யாம் அநந்ய சரணச் சரண மஹம் ப்ரபத்யே" என்று சொல்லித் தன்னடி பணிந்தார்க்குத் தான் உடனே கொடுத்துக் காத்தருள வேண்டியிருக்க ஸ்வதந்திரனும் ஸர்வஜ்ஞனுமான எம்பெருமான் பக்கலிலே மன்றாட வேண்டிய அவசியமென்கொல்? ஆகவே பிராட்டிக்கும் உபாயத்வ முண்டென்கிற வார்த்தை ஸர்வாத்மநா வ்யாஹதமாயிற்று. இது முதல் விஷயம்;

2. இனி இரண்டாவது விஷயமாவது, வேதாந்தவாசிரியர் பிராட்டிக்கு உபாயத்வ முரைப்பவரென்னில், மேலே நாம் உபபாதித்த சிறு விஷயத்தைக்கூட அவர் தெளிந்திலர் என்று அவர்க்குக் குறைகூறினதாகவே தலைக்கட்டும். உண்மையில் அவ்வாசிரியர் பிராட்டி விஷயத்தில் விப்ரதிபத்திலேஶமு மின்றிக்கே ஸகல பூர்வாசார்ய ஸம்மதமான பொருளையே பலவிடங்களிலும் பரக்கப் பேசியுள்ளார். சில காட்டுவோமிங்கு.

ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரயஸார பரிபூர்ண ப்ரஹ்மாநுபவாதிகாரத்தில் "ஈச்வரனுக்கு ச்சத்ரசாமராதிகளைப்போலே லக்ஷணமாகச் சொன்ன ஜகத்காரணத்வ—மோக்ஷப்ரதத்வ—ஸர்வாதாரத்வ—ஸர்வநியந்த்ருத்வ—ஸர்வசேஷித்வ – ஸர்வசரீரத்வ – ஸர்வசப்தவாச்யத்வ – ஸர்வ வேதவேத்யத்வ—ஸர்வலோக சரண்யத்வ—ஸர்வபல ப்ரதத்வ—லக்ஷ்மீஸஹாயத்வாதிகள் ப்ரதிநியதங்கள்" என்றருளிச் செய்யப்பட்டது. இந்த மஹா வாக்கியத்தில் மோக்ஷப்ரதத்வத்தை முந்துறச் சொல்லி முடிவில் லக்ஷ்மீ ஸஹாயத்வத்தைச் சொல்லியிருக்கையாலே, லக்ஷ்மியினிடத்தில் லக்ஷ்மீ ஸஹாயத்வம் எப்படி அஸம்பாவிதமோ அப்படியே மோக்ஷ ப்ரதத்வமும் அவளுக்கு அஸம்பாவிதமென்றும் இவையெல்லாம் பரப்ரஹ்மத்திற்கே பொருந்துமென்றும் காட்டப்பட்டதாயிற்று. முனிவாஹந போகத்தில் ஆதி என்றவிடத்தும இப்படியேதானுள்ளது. ந்யாயஸித்தாஞ்ஜந ஜீவபரிச்சேதத்திலு மிப்படியேதான். தேசிகன் சில்லரை ரஹஸ்யங்களென்றும் சில ரஹஸ்யங்கள் ஸாதித்திருக்கிறார். அவற்றை ஸேவித்தால் நல்ல தெளிவு உண்டாகும். ரஹஸ்யரத்நாவளி யென்று ஒரு சிறு ரஹஸ்யம். அதில்,

> "ஸ்ரீமானான நாராயணனொருவனுமே ஸர்வ ஜீவர்களுக்கும் தஞ்சம்......ஸர்வஸ்வாமிநியாய் ஸர்வேச்வரனுக்கு சேஷமாய் ஸஹதர்மசாரிணியான பெரிய பிராட்டியார் இத்தலையில் வாத்ஸல்யாதிசயத்தாலும் அத்தலையில் வால்லப்யாதிசயத்தாலும் புருஷகாரமாய்க் கொண்டு இஜ்ஜீவர்களுக்குத் தஞ்சமாகிறாள்."

என்றருளிச் செய்து இதை ரஹஸ்யரத்நாவளீ ஹ்ருதயமென்கிற அடுத்த ரஹஸ்யத்தில் தாமே விவரித்தருளினார். உண்மையில் விவரணாபேக்ஷையில்லாத வாக்யமன்றோவிது. இப்படி நிஸ்ஸந்தேஹமாக வருளிச் செய்த விடங்கள் ஒன்றிரண்டல்ல: பலபல விடங்களுண்டு. சதுச்ச்லோகியில் மூன்றாவது ச்லோகத்தின் பாஷ்யத்தில் "மோக்ஷப்ரதே ஹி பகவதி முமுக்ஷூணாம் வடகதயா ஏஷா திஷ்டதீதி ஸர்வஸம்மதம்—[மோக்ஷப்ரதே பகவதி முமுக்ஷூணாம் வடகதயா ஏஷா திஷ்டதீதி ஸர்வஸம்மதம்]" என்றருளிச் செய்ததொன்று போதுமே. "எம்பெருமான்தான் மோக்ஷ மளிப்பவன்; அதனைப் பெறுவிப்பவளாக மாத்திரம் பிராட்டி இராநின்றாள்" என்பது இந்த ஸம்ஸ்க்ருத ஸ்ரீஸூக்தியின் பொருள். மேலுள்ள ஸூக்திகளும் பிராட்டிக்கு உபாயத்வமில்லை யென்பதையே நிலைநாட்டுவன.

ஆக, உபபத்திக்கு மிணங்காதே தேசிகோக்திகளுக்கும் பொருந்ாதேயுள்ள அர்த்தம் ஈட்டிலுள்ளதென்றால், இதைக் கேட்டுக்கொண்டு வித்வான்கள் வாய்திறவாதேயிருந்தார்களென்றால் அது "ந தே நிரஸநீயா:, கவிதா: பரிபாலநீயா:" என்று பட்டரருளிச் செய்த கணக்கிலேயாமத்தனை. தத்வஜ்ஞானமும் தத்ப்ரகாசநபாடவமு முண்டாகில் "ஈட்டில் எமக்கு அநுகூலமாகவுள்ள அர்த்த விசேஷங்கள்" என மகுடமிட்டு இவர் தாமே ப்ரியாவில் விஷயநிவேதநம் செய்தருளட்டுமே. ருஜுமார்க்கமேது இவர்களிடத்தில்?

ஆழ்வா ரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸப்ததிரத்நம்.

ஸப்ததிவயஃப்ரவ்ருத்திஸாரஸஹிதம் த்விதீயக்ருதிரேஷா ।
ஸப்ததிரத்நஸமாக்யா ப்ராதுர்பவதி ப்ரஹ்ருஷ்டா விதுஷாம் ॥

— முன்னுரை —

*சீலமில்லாச் சிறியேன் செய்யும் விண்ணப்பம். அடியேனுடைய எழுபதாமாண்டு நிறைவுக்கு நினைவு மலராக முன்னிதழில் எழுபது நல்வார்த்தைத் திரள் வெளியிடப் பெற்றது. ஸப்ததி ரத்னமென்கிற விதுவும் இரண்டாவது நூலாக வெளியிடப் பெறுகின்றது. இது நான்கு பகுதிகள் கொண்டது. நான்கு பகுதிகளும் சேர்ந்தே ஸப்ததி ரத்நஸமாக்யை பெறுகின்றது. முதலிரண்டு பகுதிகள் ந்ருஸிம்ஹ ப்ரியா நிரீக்ஷணமாகும். மூன்றாவது பகுதி லோகாபிராமமாயிருக்கும். நான்காவது பகுதி "உத்தம க்ராமஜர்க்கு உத்தமோபதேசம்" என்று மகுடம் புனைந்திருக்கும். இவற்றைச் சிறிது விவரிக்கிறேன்.

ந்ருஸிம்ஹ ப்ரியா நிரீக்ஷணம். ஸ்ரீராமஜயந்தி மலராக ஸமீப காலத்தில் வெளிவந்த ந்ருஸிம்ஹ ப்ரியா பத்ரிகையிலுள்ள பலவகையான அவத்யங்களை ஆராய்ச்சி செய்வன முதலிரண்டு பகுதிகள். முதற் பகுதியானது கருணாகருத்ஸ்தனைப் பற்றி யெழுதிய ஒரு நபரைப் பற்றியது. இரண்டாம் பகுதியானது, "கிம் கநிஷ்டா꞉ கிமு ஜ்யேஷ்டா꞉" என்று அவரோடு விகல்பிக்கலாம்படியுள்ள மற்றுஞ் சில வ்யக்திகளின் வியாஸங்களை விமர்சிப்பது. மூன்றும் பகுதி லோகாபிராமமாகையாலே விவரண நிரபேக்ஷம். நான்காவது பகுதியைப் பற்றி இங்குச் சுருக்கமாகத் தெரிவிக்கலாகிறது. உத்தம க்ராமஜரென்றால் அறியாதாரில்லை. இவர்க்கு திவ்ய ஶப்தத்தில் மிக வெறுப்புப் போலும்; அதனால் திவ்ய பதத்தை விலக்கிவிட்டு ப்ரபந்தமென்றே பேசுவர். அதை ரக்ஷிக்கிறவராமிவர். தத்ப்ரவர்த்தகர்களும் தத்வ்யாக்யாதாக்களுமான ஆசார்யவர்யர்களை தூஷிப்பதையே தொழிலாகக் கொண்டவிவர் *ஸ்வயமவிஜ்ஞவிதம் ஸ்வயம் நஜாநாதி* என்ற கணக்கிலே சில அநந்வித வாக்ய ராசிகளை யெழுதிவிட்டு ப்ரபந்த ரக்ஷணம் பண்ணி விட்டதாகப் பாவிக்கிறார். இவர் இப்போது திருவாய்மொழிக்கு உரையிடுகிறார். மூலம் அடியோடு அறியாதவர். வியாக்கியானமு மறியாதவர். அறியாமை மட்டுமன்று; நாபி நிரம்பிய த்வேஷமு முள்ளவர். பூருவாசாரியர்களை தூஷிப்பதற்கென்றே இவர் இவ்வுரையிடும் பணியில் கைவைத்தவர் நமது ஸ்ரீராமாநுஜன் முத்ரணமாகு மிடத்திலேயே இவருடைய அவலக்ஷண ரக்ஷையும். அச்சிடப்பட்டு வருவதால் கதாசித் அது கண்ணிற்பட்டாலும் நாம் காணாக் கண்ணிட்டு வருவது நெடுநாளாக. இப்போது *கேசவன் தமர் உரை அச்சாகி வருகிறதென்றும், அதில் *விட்டிலங்கு செஞ்சோதிப் பாசுரத்தி னுரையில் ஆசார்யாபசாரம் கனத்திருக்கிறதென்றும் ஒரு பெரியார் தெரிவிக்கவே அதை நாம் உபேக்ஷித் திருக்ககில்லாமல் உற்று நோக்க நேர்ந்தது. நோய் கண்டால் சிகித்ஸை செய்து தீரவேண்டியது கடமையாதலால் அந்த சிகித்ஸையே இதில் நான்காவது பகுதியாக வடிவெடுக்கின்றது. இந்நான்கு பகுதிகளும் ஸப்ததி ரத்ன ஸமாக்யாதம். நான்காவது பகுதியில் மட்டும் ஸப்ததி ரத்னங்களிழைக்க வேண்டுமென்று நமக்கு ஆவலுண்டு. ஆனால் அது ஸமயாந்தரத்திலாகும். "தாநஹம் த்விஷத꞉ க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந்। க்ஷிபாம்யஜஸ்ரமஶுபாந் ஆஸுரீஷ்வேவ யோநிஷு॥" என்ற கணக்கிலே ஆசார்ய தூஷகர்களை நாம் உபேக்ஷித் திருப்போமல்லோ மென்பதை அறிபு முலகெல்லாம். ... . *

1. கருணையும் காருண்யமும்.

1. வடமொழியில் கருணை யென்கிற சொல்லும் காருண்யமென்கிற சொல்லும் பரியாயமானவை. கருணைவ காருண்யம்; ஸ்வார்தே ஷ்யஞ். என்பது வியாகரண ப்ரக்ரியை. இச் சொற்களின் உண்மைப் பொருளை யுணர்வார் மிகச் சிலரே. தேசிகன் தசாவதார ஸ்தோத்ரத்தில் "இச்சாமீந! விஹாரகச்சப!" என்று தொடங்கி யருளிச் செய்து வரும் சுலோகத்தில் இராமபிரானை ஸம்போதிக்குமிடத்தில் 'கருண காகுத்ஸ்த' என்றருளிச் செய்துள்ளார். இங்குக் கருணையாவது என்ன? என்பதை விவரிக்கின்றவொரு பண்டிதர் "தான் ஒரு பிரதிபலனை எதிர்பாராது இதரர்களது கஷ்டத்தைப் போக்குவது என்னலாம்" என்றெழுதியுள்ளார். (ந்ருஸிம்ஹ ப்ரியா ஸ்ரீ ராம ஜயந்தி மலரில் இது காணலாம்.) இவர்க்கு நல்ல தெளிவு பிறப்பிக்க வேண்டி இந்த வியாஸம் எழுத வெழுகின்றோம்.

2. பிறருடைய கஷ்டத்தைப் போக்குகை கருணையன்று; போக்குவதற்கு ஹேது வானவொரு மனோவிகாரம் கருணையாகும். இவருடைய கொள்கையின்படி "பரது:க்க நிராகரணம் தயா" என்று வடமொழியில் வியவஹரிக்க வேண்டியதாகும். அப்படி ஒருவரும் வியவஹரித்ததில்லை. "பரது:க்க நிராசிகீர்ஷா தயா" என்று சொல்லி வைத்தாருளர். நிராசிகீர்ஷை யென்பது நிராகரணேச்சை. அதுவும் நிராகரணமும் ஒன்றாகாது. "தான் ஒரு பிரதிபலனை எதிர்பாராது" என்றெழுதியுள்ள விவர் "ஸ்வார்த்த நிரபேக்ஷா பரது:க்காஸஹிஷ்ணுதா" என்கிற ஸ்ரீ பாஷ்யகாருடைய திவ்ய ஸ்ரீஸூக்தியைக் கண்டவர் போலும். அதன் பொருள் இவர் நினைக்கிறபடியல்ல வென்பதை மேலே உபபாதிப்போம். வருந்திக் கிடக்கிற வொரு வ்யக்தியின்மீது ஒரு மஹாபுருஷனுக்குக் கருணையுண்டானால் அவனுக்குப் பரதுக்க நிராகரண ஶக்தியிருந்தால் தந்நிராகரணத்தில் ப்ரவர்த்திக்கிறான். ஶக்தியில்லையானால் ஐயோவென்று வருந்திக் கிடக்குமளவிலே நிற்கிறான். ஶக்தனாயிருந்தாலுங்கூட துக்க நிராகரணத்திற்கு அவகாஶமில்லையானால் [ஶக்தனுக்குங்கூட] பரதுக்க தர்ஶநத்தாலே வருந்திக் கிடக்குமளவிலேதான் நிற்கவேண்டியதாகும். இவற்றுக்கு [illegible] பர்யாப்தமான உதாஹரணங்களைக் காட்டுவோம்.

3. ஸ்ரீராமாயணம் பாலகாண்டத்தில் இரண்டாவது ஸர்கத்தில் வால்மீகி மஹர்ஷி அநுஷ்டானத்திற்குச் சென்றபோது ஒரு வேடன் செய்த பக்ஷி வதத்தைப் பேசிவிட்டு உடனே (ச்லோ. 13.) "[illegible] காருண்யம் ஸமுத்பந்த—ருஷேர் தர்மாத்மநஸ் தஸ்ய காருண்யம் ஸமபத்யத" என்று கூறப்பட்டுள்ளது. வேடனால் கொன்று வீழ்த்தப்பட்ட பறவையைப் பார்த்த தர்மாத்மாவான மஹர்ஷிக்குக் காருண்ய முண்டானதாகச் சொல்லிற்று. இங்கே காருண்யமாவது என்ன? என்பதை நிரூபகர்கள் நன்கு ஆராயவேண்டும். "இதரர்களது கஷ்டத்தைப் போக்குகை" என்கிற பொருளுக்கு இங்கு ப்ரஸக்தி லேஶமாவது உண்டோ? அங்கு நேர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ள கஷ்டமானது ஸர்வ ஶக்தனான ஸர்வேச்வரனாலும் போக்கக் கூடியதன்றே. ருஷிக்குக் காருண்ய முண்டாயிற்றென்றால் பரது:க்க நிராகரண முண்டாயிற்றென்பதும் பொருளன்று; நிராகரணேச்சை யுண்டாயிற் றென்பதும் பொருளன்று. துக்க முண்டாயிற் றென்பதுதான் பொருள். இது பொருளன்று என்னில்; தாம் கொண்ட பொருளை உபபாதிக்கலாமே.

4. கருணா காகுத்ஸ்த! என்கிற தேசிக ஸ்ரீஸூக்தியானது ஸ்ரீ சக்ரவர்த்தி திருமகனை நோக்கி யவதரித்ததாதலால் அப்பெருமான் தன்னுடைய கருணையை ஸ்ரீராமாயணத்தில் எவ்வாறு வெளியிட்டிருக்கிறானென்பதைச் சிறிது பார்ப்போம். இது பார்ப்பதற்கு முன் எம்பெருமான் திருவவதாரங்கள் செய்தருளினது எதற்காக வென்பதை முக்கியமாகப் பார்க்கவேணும். "குணபரீவாஹார்த்தாநாம் ஜந்மநாம்—குண பரீவாஹாத்மநாம் ஜந்மநாம்* என்று பட்டர் அருளிச் செய்திருக்கையாலே தன்னிடத்தில் நிரம்பியுள்ள சிறந்த திருக் குணங்களை வெளியிடுவதற்காகவே திருவவதாரங்கள் அமைந்தன வென்பது திண்ணமாகும்.

5. உத்தர ராம சரிதத்தில் "பூரோத்பீடே தடாகஸ்ய பரீவாஹ: ப்ரதிக்ரியா" என்று பவபூதி மஹாகவி சொன்னதைக்கொண்டும், ஸ்தோத்ரரத்னத்தில் "ஸ்வபரிசிதா அத்யுத்பூத ஹர்ஷிதஸ்வஜ்ஞாநா ஸ்ருதாபி பரிவாஹமநோபிராமை:" என்று ஆளவந்தார் அருளிச் செய்ததைக் கொண்டும் பரீவாஹசப்தார்த்தம் தெளியக்கடவது. பரீவாஹ க்ரியை இல்லையானால் தரிப்பு ஏற்படாதென்பது உலகமறிந்த இயல்வு. எம்பெருமான் அவதாரங்களைச் செய்து அவற்றில் திருக்குணங்களை விளங்கச் செய்தருளாவிடில் அவனால் தரிக்க முடியாதென்பது தேறிற்றாகும். ஸாது பரித்ராணமும் துஷ்க்ருத் விநாசநமும் தர்ம ஸம்ஸ்தாபனமும் அவதார ப்ரயோஜநமாக அவன்றன்னாலே சொல்லப்பட்டிருந்தாலும் ஸ்வகுண குணாவிஷ்காரமே பரம ப்ரயோஜநமாகும்.

6 சாரீரக மீமாம்ஸையில் *அந்தஸ்தத்தர்மோபதேசாத்* என்கிற ஸூத்ரத்தின் ஸ்ரீ பாஷ்யத்தில் "பரித்ராணாய ஸாதூநாம்" இத்யாதி கீதா ச்லோகத்தை விவரித்தருளுமிடத்து "அவதாரத்திற்கு ப்ரதாந ப்ரயோஜநம் ஸாது பரித்ராணமே; துஷ்க்ருத் விநாசநம் ஆநுஷங்கிகம்; ஸங்கல்ப மாத்ரத்தைக் கொண்டும் அது செய்து தலைக்கட்டலாகுமன்றே" என்றருளிச் செய்துள்ளார். இதனால் ஸாது பரித்ராணம் ஸங்கல்ப ஸாத்யமாகாதென்றும் அவதரித்தே அது செய்து தீரவேண்டுமென்றும் ஸ்பஷ்டமாகத் தெரிவிக்கப்பட்டதாயிற்று.

7. "ஏன்? துஷ்ட சிக்ஷைக்கு உபயோகப்படுகிற ஸங்கல்பம் ஸஜ்ஜநரக்ஷைக்கும் உபயோகப்படாதோ? என்று கேள்வி பிறக்கும். "துஷ்டா விநஷ்டா பவந்து" என்று ஸங்கல்பிப்பதுபோல "ஸாதவ: பரித்ராதா பவந்து" என்று ஸங்கல்பிக்க முடியாதா? அத்தகைய ஸங்கல்பத்தினால் ஸாது பரித்ராணம் ஸித்திக்க மாட்டாதா?" என்று சங்கை தோன்றினால் இதற்குப் பரிஹாரம் செய்ய ஸ்ரீ வைஷ்ணவர்கள் யாவரும் முற்பட வேண்டும். ஆழ்வார் திருவாய்மொழியில் (3—1—9) *மழுங்காத ஞானமே படையாக மலருலகில் தொழும்பாயார்க் களித்தால் உன் சுடர்ச் சோதி மறையாதே* என்றருளிச் செய்த பாசுரத்தை யடியொற்றி ஸ்ரீ பாஷ்யகாரர் அந்தராதிகரண பாஷ்யத்திலிருந்து நாம் மேலே உதாஹரித்த விஷயத்தை அருளிச் செய்தாராயினும் 'ஸாது பரித்ராணம் ஏன் ஸங்கல்ப ஸாத்யமாகாது?' என்கிற கேள்விக்கு ஸ்ரீபாஷ்யாதிகாரிகள் விடையிறுத்தேயாக வேண்டுமன்றே.

8. *பரித்ராணாயேத்யாதி ச்லோக பாஷ்ய தாத்பர்ய சந்திரிகையில் தேசிகனும் அந்த ஸ்ரீ பாஷ்ய ஸூக்தியை உதாஹரித் தருள்வதோடு நில்லாமல் "நஹி ஸ்வஸங்கல்பமாத்ரவக்லுப்த அவதாரணேந ஸம்ரக்ஷணம் ஸாத்யம் ப்ரக்ருதி ஸாதவ:" என்று ஸ்வஸூக்தியாலு மருளிச் செய்கிறார். இவ்விடங்களை ப்ரவசநம் செய்பவர்கள் ஏடு தள்ளிக் கொண்டும் கனைத்துக்கொண்டும் போமவர்களே யல்லது நெஞ்சுருகிக் கண் பனிப்ப நின்று பேசும் ஸாத்வரிவாக முடையரல்லர். அன்னவர்கள் கிடக்க.

9. கேண்மின்; ஸாது பரித்ராணமாவது என்ன? என்பதை நிஷ்கர்ஷித்தா லொழிய மேற்குறித்த கேள்விக்கு விடையிறுக்க இயலாது. அதற்குறுப்பாக ஸாதுக்களாவார் இன்னு ரென்பதை முந்துற முன்னம் அறுதியிட வேண்டும். இவற்றில் நமக்கு ஆயாஸமில்லாதபடி ஸ்வாமி தாமே கீதா பாஷ்யத்தில் விவரித்தருளினர்; எங்ஙனே யென்னில்; (கீதை 4—8 பாஷ்யத்தில்) "ஸாயவஃ—உதுக்ஷண யஉ-ஶீயா வைஷ்ணவாமெ ஸாராஃ............" இத்யாதி வாக்யத்தாலே ஸாதுக்கள் இன்னுரென்று காட்டியருளினர். அவர்களுடைய பரித்ராண ஆகாரம் எப்படிப்பட்டதென்பதை உடனே விவரித்தருளினர். "உகிலா-வெ தெஷிதா வழொகந - ஸூஜாவாவிஷாநெந தெஷாம வரித்ராணாய" என்கிற ஸ்ரீஸூக்தியினுல். இந்த ஸ்ரீ ஸூக்தியின் பொருளை உட்புகாமல் மேலெழப் பார்த்தாலும் போதும். இதில் (மத்ஸ்வரூப) என்றதில் ஸ்வரூப ஶப்தார்த்தம் திவ்ய மங்கள விக்ரஹமென்று தேசிகன் உரைத்தருளினர். அதற்கு மேல் செஷிதாவழொகநாநமும் ஸூஜாவஷாநமும் அருளிச் செய்யப்பட்டிருக்கிறதல்லவா? *வாய் திறந்தொன்று பணித்ததுண்டு* என்று திருமங்கை யாழ்வா ரருளிச் செய்தபடியே சோதி வாய் திறந்து வார்த்தையாடுவது ஆலாபஷாநம்.

10. இனி செஷிதாவழொகநஷாநமாவது என்னவென்று பார்க்கவேணும். விராத வதம் வாலி வதம் கபந்த வதம் முதலான சேஷ்டிதங்களின் அவலோகநஷாநமா இங்கு ஸ்வாமிக்கு விவக்ஷிதம்? "யா கஃஸஉ-வஹ்நரவகீட நிபஹுணொது ஸா நிஜிஉதஜி ஜம தஜ்வ நெவகீதிஃ" (அதிமாநுஷஸ்தவே) என்னு மாசிரியர்கள் அவற்றை ஒன்றுக மதிப்பர்களோ?

11. கருணுகாகுத்ஸ்த! என்கிற ஸ்ரீஸூக்தியானது இராமபிரான் திறத்ததாகை யாலே அவனுடைய சேஷ்டித விஶேஷங்களில் ஒன்று காட்டுவோம்; வாலி மாண்ட பின்பு பெருமாள் திருவுள்ள முடைகுலைப்பட்ட படியைப் பேசுகின்ற வான்மீகி முனிவர் *ஸஂஜாத பாஷஃ பரவீரஹந்தா ராமொ உஹூத்தஂ விமநா பபூவ—ஸஞ்ஜாத பாஷ்பஃ பர வீர ஹந்தா ராமோ முஹூர்த்தம் விமநா பபூவ.* என்று பேசியுள்ளார். இதில் முன்னம் "ஸஞ்ஜாத பாஷ்பஃ" என்று ஸுக்ரீவ துக்க தர்சனத்தாலே பெருமாள் கண்ணீர் விட்டழுத படியைக் கூறினன் ரிஷி. அது மேலுக்கு அழுதபடியோ? அன்றி உள்ளிலும் வெதுப் புண்டோ? என்ன; "முஹூர்த்தம் விமநா பபூவ" என்று உடனே சொல்லிற்று. விகூதம உநொ யஸ்யஃ—விமநாஃ; வெறுமனே அழுதவளவே யன்றிக்கே மனமும் விகாரமடையப் பெற்றனென்கை.

12. தசரத சக்ரவர்த்தியிடம் ஸ்ரீராம குணங்களை யெடுத்துக் கூறுகின்ற நகரவாஸி ஜனங்கள் *வ்யஸநெஷு உநுஷ்யாணாம ஹ்ருஶம ஹவதி ஃஃவிதஃ—வ்யஸ நேஷு மநுஷ்யாணும் ப்ருஶம் பவதி துஃக்கிதஃ* என்றது ஸாமாந்யமான வார்த்தை; அத்தகைய ஸ்ரீராம குண விஶேஷம் காணப்பட்ட விடம் கூறினது இங்கே. துக்கப்படுவ தென்பது ஹேயமாகையாலே அகில ஹேய ப்ரத்யநீகனை ஸர்வேச்வரன் ஒருபோதும் துக்கப்பட மாட்டான் என்றும், துக்கப்பட்டதாகக் கண்டால் அது வெறும் அபிநய மாத்ரமே யென்றும் சொல்லப் பிறந்தவர்களே மலிந்துள்ளார்கள்.

13. இத்தகைய ஹமவகுணஸஹிஷ்ணுக்கள் எம்பெருமானர் கூரத்தாழ்வான் ஹட்டர் முதலானர் காலத்திலேயே தலைகாட்டி மடிந்தமை ஹமவகுண உவஷணாதி ஒநூஜமா யிருக்கையாலே இவர்களை நிரஸிக்க நாம் ஆயாஸங் கொள்ளத் தேவையில்லை.

14. "ஸ்வார்த்த நிரபேக்ஷா பரது:க்காஸஹிஷ்ணுதா தயா" என்கிற ஸ்ரீ பாஷ்யகார ஸ்ரீ ஸூக்தியைச் சிறிது விமர்சிப்போம். துக்கமுண்டாகும்போது அதனை ஸஹிப்பதும் ஸஹிக்க முடியாமையுமாகிற இரண்டு நிலைமைகள் எங்குமுள்ளன. துக்கத்தை ஸஹித்துக் கொள்ளுகையாவது அதைப் பாராட்டாம லிருந்து விடுகை. இனி, ஸஹிக்கமாட்டாமை யாவது என்ன? என்று விமர்சிக்க வேணும். "ஸ்ரீராமன் பத்நீவியோகத்தை ஸஹிக்க மாட்டிற்றிலன்; ஸ்ரீராமன் ப்ராத்ருவியோகத்தை ஸஹிக்க மாட்டிற்றிலன்" என்று சொல்லுவோமாயின் இதற்குப் பொருளென்ன? துக்கத்தை அதிகமாக வெளிக் காட்டுகிறானென்பது தவிர வேறு அர்த்தமில்லையன்றோ. உண்டாகில் உரைக்கலாம். ஏவஞ்ச, "பரது:க்கா ஸஹிஷ்ணுதா தயா" என்றருளிச் செய்த எம்பெருமானாருடைய திருவுள்ளம் பரது:க்க து:க்கித்வம் தயா என்பதேயாம். து:க்கித்வமென்பதிற் காட்டிலும் அஸஹிஷ்ணுதா என்பது மிக மேம்பட்ட சொல். துக்கத்தின் எல்லையில் நிற்பதைக் காட்டுமிது.

15. ஆளவந்தார் "ஸுஹ்ருத்தவஸ்வம் ஸஹாஸி கிம்வா ஸர்வம் ஸஹே ஸஹஜம் ஸஹி து:ஸஹம்"—எந்த துக்கத்தையும் நான் ஸஹித்துக் கொண்டிருக்கிறேனென்றார். ஸம்பவிக்கின்ற துக்கங்களுக்காக நான் சிறிதும் கவலை கொள்ளவில்லை யென்பதுதான் இவ்விடத்திற் பொருள். இவ்வாசிரியர் தாமே மேலே "மஹாத்மபிர் மாமவலோக்யதாம் நய க்ஷணேபி தே யத்விரஹோதிது:ஸஹ:" என்றருளிச் செய்கிறார். மஹாத்மாக்களான பாகவதோத்தமர்களின் க்ஷண கால விச்லேஷமும் எம்பெருமானுக்கு அத்யந்த மஸஹ்யம் என்றது இங்கு. அஸஹநத்வத்தை எங்ஙனே காட்டுகிறானென்று கேட்டால் ஆர்ஜவத்துடன் விடையளிக்க வேணும். அளவுகடந்த மனோவிகாரத்தாலன்றி வேறு எதனாலும் அஸஹிஷ்ணுதையை உபபாதிக்க முடியாது. "வேதோ நவிவக்ஷித:" என்பது விசார ஸஹமன்று.

16. அடியார்களிடத்தில் அநுகம்பையே வடிவெடுத்த எம்பெருமானுக்கு மனோவிகாரம் கிடையாதென்று வேதாந்திகளால் சொல்ல முடியாது. ஸஹஸ்ரநாமத்தில் விகர்த்தா என்றே ஒரு திருநாமமுள்ளது. அதற்கு பட்டருடைய பாஷ்யத்தை யெடுத்து ஸேவித்தால் மனம் தெளிவுபெறும். அடியார்களோடு கலந்து பரிமாறும்போது ஹர்ஷப்ரகர்ஷமும், அடியாருடைய விச்லேஷத்தில் ஆற்றாமையும் அவனுக்கு இல்லையென்றால் அவனைப் பரமசேதநனென்று இசைந்து பயனில்லை. குணாநுபவம் செய்பவர்களும் குண ஸம்ருத்தியை எழுதி வைப்பவர்களும் இல்லாத குணங்களையா அநுபவித்தார்கள்? எழுதிவைத்தார்கள்? இப்படிச் சொல்லுவதைவிட மாயாவாதிகளின் மதத்தில் உட்புகலாமே.

17. ஹர்ஷ சோகங்களை ஸாத்யமென்றும், பாத்யமென்றும் இரு பகுதியாகப் பிரித்து மதுரகவி ஹ்ருதயத்திலே பட்டர் ஸமர்த்தநம் செய்தருளியிருந்தும் அதைக் காணாமலும், காட்டினாலும் காணகில்லாமலும் சுஷ்கவாதங்களையே ப்ரபஞ்சநம் செய்பவர்கள் *ஹக்ஷு ஹூஹாவ ஹவது:க்கத ஸாவதாநஸம்யக்ஷித ப்ரணய ஸார ப்ரஸௌலப பாஷ்யம் கல்பவயோக்யமின் அருகும் வாராமே நிற்பது அழகிது. *கண்கள் சிவந்து திருவாய்மொழியின் ப்ரசய மறியீரந்தோ!

18. "அடியார்க்கு ஆவா வென்றிரங்கி" என்றும், "ஆவாவென்று அடியேற்கு இறையிரங்காய்" என்றும் "ஆவாவென விரங்கார் அந்தோ! வலிதேகொல்! மாவாய் பிளந்தார் மனம்" என்றும் இங்ஙனே யுள்ள அருளிச் செயல்களை நிர்வஹிப்பது எப்படி? ஹா ஹா என்கிற வடசொல்லேயன்றோ தமிழில் ஆவாவென்றாயிற்று. ஹாஹாகார மில்லாதவனைப்

பரமகாருணிகனென்பது எங்ஙனே? உலகிலுள்ள மருத்துவர்கள், நோயாளிகளாய் அஸஹ்ய துக்க மநுபவிக்கின்றவர்களைக் கண்டு சிறிதும் மனோவிகாரமடையாமல் சிகித்ஸை செய்வதுண்டு. அன்னவர்களுங்கூட தங்களுடைய உறவினர்க்கு சிகித்ஸை செய்ய நேருங் காலங்களில் மனோவிகார மடையாதிருக்க கில்லார்கள்.

19. "[Grantha quotation]" இத்யாதிகளான பல ப்ரமாணங்களை யெடுத்துக்கொண்டு ஒரு குறையுமின்றிக்கே பொருந்தவிட்டிருக்கும் பரிசுகள் நம் ஆசாரியர்களின் திவ்ய க்ரந்தங்களில் ஸ்பஷ்டம் பொலிந்து விளங்காநிற்கவும் மருள் தீராதார்க்கு மொழிவதெல்லாம் *ஊமையரோடு செவிடர் வார்த்தையா மத்தனை.

20. *[Grantha quotation] ஜீவே து:காகுலே விஷ்ணோ: க்ருபா காப்யுபஜாயதே* என்ற ச்லோகத்தை யடியொற்றி ஸட்டர் ஸாதித்தது "[Grantha quotation] தயா நந்த நா:" என்று. இதில் "தயா நந்த நா:" என்றதை நன்கு விளக்கப்புகுந்த தேசிகன் தயாசதகத்தில் "[Grantha quotation] ஜாதநிர்வேதா" என்றருளிச் செய்தார். இந்த சதகத்தில் தயாதேவியான ஸ்ரீதேவியுடைய செயல்களை யெல்லாம் தயையின் மேலேற்றி அருளிச்செய்து வருவதால் து:க்காகுலர்களான ஜந்துக்களைப் பார்த்து ஜாதநிர்வேதத்வமேதான் தயா நந்தநத்வமென்று சிலாசாஸனம் செய்ததாயிற்று.

— உபஸம்ஹாரம். —

21. நிர்குண ப்ரஹ்மவாதிகளைக் கண்டித்து ஸகுணப்ரஹ்மவாதம் பண்ணிப் போருவார் திரளிலே சேர்ந்தவர்கள் வேதோபப்ரும்ஹணமான ஸ்ரீராமாயணத்திலே "பஹவோ ந்ருப கல்யாண குணா: புத்ரஸ்ய ஸந்தி தே" என்ற மகுடத்தின் கீழ்ப் படிக்கப்பட்ட இந்த மஹாகுணத்தை இல்லை செய்யவும் தூஷிக்கவும் முற்படுவது [Grantha]. "கருணையாவது இதரர்களுடைய கஷ்டத்தைப் போக்குவது என்னலாம்" என்று ஒரு பிரமாணத்தோடும் பொருந்தாதபடி யெழுதியது பிசகு. (போக்குவது) என்ற தமிழ்ச் சொல்லுக்கு நிவர்த்தநம் என்கிற அர்த்தம் போலவே நிவர்த்தகத்வமென்கிற அர்த்தமும் சொல்ல இடமுண்டு. அப்படி அர்த்தமானால் ஒருவாறு பொருந்தும். அப்போது (கருணையாவது) என்றிருக்கக் கூடாது, 'கருணையானது' என்றிருக்க வேண்டும். எழுதினவர்க்கு அவ்வபிப்ராயம் சிறிதுமில்லை. கருணாலக்ஷணம் கூறுகின்ற விவர் அஸாரதமாகவே கூறினாரென்று முடிந்தது.

22. ஸர்வசக்தனோடு அசக்தர்களோடு வாசியற எல்லார்க்கும் பொதுவான ரீதியிலே கருணாலக்ஷணம் கூறவேண்டும். பரது:காஸஹிஷ்ணுத்வமென்பதே யாகுமது. இதுதான் ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச் செய்த லக்ஷணம். த்ரௌபதி, கஜேந்திராழ்வான்போல்வார் விஷயத்திலே எம்பெருமான் துயர் தீர்த்தவனாயிருந்தும் [Grantha] விஷயமான துக்கத்திற்குப் பரிஹாரம் கண்டதுண்டோ? "நாதிவர்த்தே யதௌ" என்றவிடத்து நிர்வாஹ ஸௌந்தர்யத்தை நினைப்பூட்டி நிற்கிறோம். நினைப்பூட்டுவது இவர்களுக்கன்று; மஹா ரஸிகர்களுக்கு. .... *

ந்ருஸிம்ஹ ப்ரியா நிரீக்ஷணத்தில் முதல் விஷயம் முற்றிற்று.

இனி இரண்டாவது விஷயம். (ந்ருஸிம்ஹப்ரியாத:)

23. பேசுவது எழுதுவது என்கிற இரண்டு காரியங்களும் விலக்ஷண பண்டிதர்களுக்குப் ப்ராப்தமானவை. ஆனால் வாயுடையாரெல்லாரும் பேசத் தொடங்குகிறார்கள்; எழுத்துக் கருவியுள்ளவர்களெல்லாரும் எழுதத் தொடங்குகிறார்கள். "வெண்பா இயற்றுவது கஷ்டம்; அதிலும் குறள் இயற்றுவது மிகவும் கஷ்டம்" என்னக் கேட்டவொருவர் அதன் இலக்கணத்தைச் சுருக்கமாகத் தெரிந்துகொண்டு "சிறப்புடன் பூனை இறப்பிலிருந்தால், புறப்பட மாட்டாதெலி" என்று குறளொன்று பாடிவிட்டுப் பெருமிதம் கொண்டாராம். இப்படி எவ்வளவும் பாடிவிடலாம், எவ்வளவும் பேசிவிடலாம். எழுதிவிடலாம்.

24. "ஸுநாஸ்வாதாவஹஸ்ரீம் பஹுகுணவரீணாஹி" என்று பட்டர் அருளிச்செய்தபடியே வாணீ விலஸிதம் இக்காலத்தவர்களில் ஒருவர்க்கும் அமையாதெனினும் ஸுநாஸ்வாதாவஹத்வமென்ற ஒரு விசேஷணமாவது அமையவேண்டுவது அவசியமாம். பேசுவதைப் பற்றிப் பிறகு சொல்வோம்; எழுதுவதைப் பற்றிச் சொல்லாதிருக்க முடியவில்லை. ஒரு பெரிய ஸ்தானத்திலிருந்து வெளிவருகின்ற பத்திரிகை யென்றால் சல்லடை போட்டுச் சலித்தாலும் ஒரு பிழைகூட காண்பதற்கு இடமின்றியே யிருக்கவேண்டுமல்லவா? அச்சுப் பிழை நேர்ந்துவிடுவது நிற்க. அதற்குக்கூட இடமின்றியே வெளிவருமவை ஸ்ரீவைஷ்ணவ ஸாஹர்ஸநாதிகள் காணுகின்றோம். அச்சுப் பிழையாயிருந்தால் அதை எளிதாக யாவரும் தெரிந்து கொள்வர். அதைப்பற்றி நாம் ப்ரஸ்தாவிக்க மாட்டோம். மேலோல அச்சுக்கூடத்தில் வேலை செய்பவர்களெல்லாரும் சிரோமணிகளாம், காலக்ஷேபமெல்லாம் செய்து முடித்தவர்களாம். பண்டிதம்மந்யர்களான ஸேவகர்களின் பிழைகளை அச்சுக்கோப்பவர்களான அவர்களின் தலையில் ஏற்ற நினைப்பது ஏலாது.

25. அச்சுப் பிழையென்பது தவிர மற்றைப்படியான பிழையில் இரண்டு வகையுண்டு; (1) அநந்விதமாக எழுதுவதொன்று. (2) பர்யாப்தமான படிப்பு இல்லாமையினால் பதஸ்வரூபமர்மங்களை உள்ளபடி தெரிந்துகொள்ளாமல் கைபோனபடி எழுதிவிடுவது மற்றொன்று. இவ்விருவகையான பிழைகளும் மலிந்த பத்திரிகையைப் பிரசுரம் செய்வதனால் யாருக்கு என்ன உதவி செய்ததாகும். இக்காலத்தில் ப்ராஹ்மணோதார்களும் மாதர்களும் எவ்வளவு அழகாக எழுதக் கற்றிருக்கிறார்கள் தெரியுமோ? அவ்வளவு அழகாக எழுதவேண்டாமிவர்கள். "மொட்டை சாத்தானி குட்டையில் விழுந்தான்" என்று எழுதினாலுங்கூட அதை ஒரு பிழையில்லாமல் எழுதவேண்டாமா? "ஸ்ரீமதே ராமாநுஜாய நமஹா" என்று எழுதிக் கொண்டிருந்தவர்களை யெல்லாம் கிளப்பி 'பணம் காசு தருகிறோம், எழுதுங்கள்' என்றால் அவர்கள் என்ன எழுதக்கூடும்? நிர்ப்பந்தம் பொறுக்கமாட்டாமல் எதையோ எழுதியனுப்பி விட்டால் அதை ஒழுங்குபடுத்தி அச்சுக்குக் கொடுக்கவும், அச்சிட்டபின் நன்கு திருத்தவும் ஒரு சிறந்த பண்டிதர் வேண்டாவா? 'செய்வன திருந்தச் செய்' என்றதையு மறியாமல் ஏதோ காரியம் நடத்திவருகிறார்களந்தோ!

26. "ஸஞ்சார க்ரமம்" என்று மகுடம் புனைந்த வியாஸம் அடிக்கடி வெளிவருகிறதே; இதை யெழுதுபவர் யார்? என்று கேட்டதற்கு 'முதலாளியேதான் எழுதியனுப்புகிறார்' என்கிறாரொருவர். 'காஸாகாரர்தாம் எழுதியனுப்புகிறார்' என்கிறார் மற்றொருவர். நாம் அஜ்ஞாத ப்ரச்நம் பண்ணவில்லை. ஜ்ஞாதாஜ்ஞாதீகரணம் ஆயிற்றத்தனை. ப்ரஸ்துத

ஜயந்தி மலரில் உபக்ரமத்தில் "மானுமதுரையில் பந்தல்குடி வக்கீல் அய்யங்காரால் பெருமாளுக்கு திருமஞ்சனம் பண்ணிவைத்து ததியாராதனமும் பண்ணிவைத்தார்" என்றுள்ளது. பண்ணிவைத்தாரென்ற வினைமுற்றுக்கு எழுவாய் தெரியவில்லை? யார் பண்ணிவைத்தாரென்று கேட்டால் மானம் பார்க்கவேண்டியதே. அய்யங்காரால் என்கிற த்ருதீயைக்கு எங்கே அந்வயமென்று கேட்டால் அதற்கும் அதுவே கதி. (பண்ணி வைத்தார்கள்) என்றிருந்தாலாவது 'மானுமதுரையார்கள் அய்யங்காரைக் கொண்டு பண்ணிவைத்தார்கள்' என்று ஒருவாறு கருத்து அமைத்துக் கொள்ளலாம். 'இப்போதுள்ள ரீதியில் என்ன குறை?' என்பரேல் ஒரு குறையுமில்லையென்று விட்டிடுவோம். இவர்களுக்கு எதிலும் குறையில்லை.

27. மேலே "விசிஷ்டாத்வைதத்தைப் பற்றி ஸ்ரீ அழகியசிங்கரால் விசேஷமாக உபந்யாஸம் செய்துவைக்கப்பட்டது" என்றுள்ளது. (செய்யப்பட்டது) என்றோ, (செய்தருளப்பட்டது) என்றோ (செய்தருளியாச்சுது) என்றோ எழுதுவதை விட்டு [செய்து வைக்கப்பட்டது] என்றதிலுள்ள சுவையை யுணர நாமார்? சுவைமிக்க சொற்றொடை இது போலும். இங்கு நமக்கு முக்க்ய விவக்ஷிதம் இதுவன்று; மேலே கேளீர்.

28. காஞ்சீபுரியில் சின்னி வீராதாதாசாரியரென்று ஒருவரிருந்தார். இவர் வ்யாகரணாந்தம் ந்யாயம் வாசித்தவராம். வ்யாயமும் வாசித்ததாகச் சொல்லிக் கொள்வதோடு நில்லாமல் புதுக்கோட்டை, கத்வால், வநபர்த்தி முதலானவிடங்களில் நடக்கும் ஸதஸ்ஸுக்களுக்கும் சென்று வாக்யார்த்தம் சொல்லி உத்தம ஸன்மானம் பெற்று வந்ததாகவும் சொல்லிக் கொள்வராம். "சதுர்தஶ லக்ஷணியில் நான் ஒரு பெரிய விஷயம் சொன்னேன்; அதற்குமேல் ஆஸ்தான வித்வான் ஒரு கோடி சொன்னார்; அதை உடனே பக்ஷதையில் ஒரு விஷயத்தை யெடுத்துச் சொல்லிக் கண்டித்துவிட்டேன்; அதற்குமேல் அவன் ஒன்றும் சொல்லமுடியாமல் நிற்க, வேறொரு வித்வான் ஏதோ பூர்வபக்ஷம் பண்ணினார்; உடனே நான் ஸித்தாந்த லக்ஷணத்திலிருந்து விஷயம் சொல்லி அதைக் கண்டித்துவிட்டேன்"......... என்று இப்படியே ஓயாமல் தன்னுடைய வாதவ்ருத்தாந்தத்தைச் சொல்லிக் கொண்டிருப்பராம். இடையிலே ஒருவர் வந்து "நீர் சொன்ன விஷயமென்ன? அதன்மேல் பூர்வபக்ஷம் வந்த ப்ரகாரங்கள் என்ன? பிறகு நீர் ஸ்தாபித்த ஸித்தாந்தமென்ன?" என்று கேட்பராம். அதற்கு பதில் சொல்லச் சரக்கில்லாமையாலே அதை விட்டுவிட்டு முன்சொன்ன வகையிலேயே பேசிக்கொண்டிருப்பராம். இது சின்னி வீராதாதம் வாக்யார்த்தமென்று ப்ரஸித்தம.

29. இதேபோல "அழகசிங்கர் ஆச்சரியமாக விஷயம் ஸாதிச்சாச்சுது; பண்டிதர்களெல்லாரும் திக்ப்ரமம் பிடித்து நிற்குப்படி ஸ்ரீபாஷ்யத்தில் இதுவரை ஒருவரும் சொல்லக் கேட்டிராத அபூர்வ விஷயங்களை சொரிந்தாச்சுது" என்று சொல்லித் திரியவும், இவ்வண்ணமாகவே பத்ரிகையில் எழுதிப் பிரசுரம் செய்யவும் பொருட்செலவு அபரிமிதமாகச் செய்யப் பட்டு வருகிறது. ஸ்தானத்திற்கு இது மிகவும் ஆவச்யகம் என்பதை நாம் மறுப்போமல்லோம். நெடுந்தெருவில் "ஜஜ்ஞாஸாக ஸ்ரீ நக்ஷம காஷாயெண வியெதெ" என்கிற ஒரு வாக்யத்தை யெடுத்துக்கொண்டு ஐந்தாறு மணிகாலம் ஆச்சரியமாக உபந்யஸிச்சாச்சுது என்கிறாரொருவர். திருப்பாவையில் தூப்பல் என்கிற சொல்லை ஆண்டாள் ஸாவிஜ்ஞானத்தாலே ஒரு பாசுரத்தில் அமைத்திருக்கிறாளென்று ஸாதித்து *தூமணி மாடத்துப் பாசுரத்தில் அதைக் காட்டியாச்சுது என்கிறாரொருவர். எப்படியென்றால், பாட்டின் முதலெழுத்து (தூ); மாமீர் அவளை யெழுப்பீரோ என்றவிடத்தில் (ப்) உள்ளது; ஆக (தூப்) என்றாயிற்று;

'மந்திரப்பட்டாளோ' என்றவிடத்தில் (ப) உள்ளது. ஆக, (தூப்ப) என்றாயிற்று; 'ஏமப் பெருந்துயில்' என்றவிடத்தில் (ல்) உள்ளது; ஆக (தூப்பல்) தேறிவிட்டதல்லவா? என்று நிரூபணம் செய்தருளியாச்சுதாம். இதைக் கேட்டவர்கள் யாவரும் 'இது என்ன விலக்ஷண மேதா விலாஸம்!' என்று உகந்து வியந்து கரைந்து மூக்கிலே விரலை வைத்தார்களாம்.

30. ஸ்ரீ பாஷ்ய சாந்தி செய்தவன்று வித்வான்களெல்லாரும் சிரஸ்ஸும் பிடித்து நிற்கும்படி ஆச்சரியமாக ஸாதிச்சாச்சுது என்கிறார்களே, அந்த அர்த்த விசேஷம் உமக்குத் தெரியுமோ? என்று *சாரியரைக் கேட்க, ஹா ஹா! அது எவ்வளவோ ஆச்சரியமான விஷய மல்லவா? என்று அவர் கண்ணீர் மல்க நின்று சொன்னார். மூன்று மணி காலம் ஸாதித்தும் ஸூத்ரார்த்தமே முடியவில்லையே; பாஷ்யத்தைத் தொடவே அவகாசப்படவில்லையே! என்றார். அதைக் கொஞ்சம் சொல்லலாகாதோ? என்ன, "சுருக்கமாகச் சொல்லுகிறேன் கேளும்; புங்காநுபுங்கமாக ஸாதித்தாச்சுது; ஸாரமாகச் சொல்லுகிறேன் கேளும்" என்று தொடங்கிச் சொன்னார். *அநாவ்ருத்திஶ்ஶப்தாத்* என்பது ஸூத்ரம். 'ஸூத்ரேஷு ஏவ ஹி தத் ஸர்வம் யத் வ்ருத்தௌ யச்ச வார்த்திகே' என்று நியாயமாகையாலே பூர்வ மீமாம்ஸையிலிருந்தும் அஷ்டாத் யாயியிலிருந்தும் பல பல பதங்களை அநுவ்ருத்தி செய்துகொண்டு ஸாதிச்சாச்சுது. அ—ந— ஆவ்ருத்தி. என்று பிரித்துக்கொண்டு (அ) அத்வைத மதமானது; (ந) அஸங்கதம். ஏனென்றால் (அவ்ருத்தி) இவர்களின் பக்ஷத்தில் வ்ருத்தி க்ரந்தம் அநுக்ரஹமாக இல்லாமையாலே. இது எப்படி தெரிகிறதென்றால் (ஶப்தாத்) வ்ருத்தி க்ரந்தத்தை தூஷித்து அவர்கள் எழுதிக் கொண்டிருக்கிற ஶப்தங்களாலே நன்கு தெரிகிறது. இங்கே ஶகார விகாரம் எப்படி வந்ததென்று பரிசாரகர் கேட்டுவிட்டார்; அர்த்த ஸ்வாரஸ்ய மறியாமல் இது என்ன கலஹம்! என்று அவரை வெருட்டித் தள்ளியாச்சுது. ஒரு ஶாஸ்த்ரத்திலுள்ள ஸூத்ரத்தை நிர்வஹிக்க வேறொரு ஶாஸ்த்ரத்திலிருந்து பதங்களைக் கொண்டு கூட்ட லாமோ? என்று கண்ணன் கேட்க, ஓய்! நீர் வியாகரண வாஸனையே அறியீர் போலும்; *ஶாப நவாம்ஸகஸ்ய* என்கிற பாணினிஸூத்ரத்தை நிர்வஹிக்க ப்ரஹ்மஸூத்ரத்தில் 'ஜந்மாத்யஸ்ய யத:' என்றதிலிருந்து ஜந்ம என்று கொணர்ந்த 'நவாம்ஸகஸ்ய ஜந்மஶாப' என்று அர்த்தம் சொல்லுவதில்லையோ? என்ன, அவரும் திகைத்துப் போனார். என்றித்த கைய விசேஷங்கள் நமது செவியில் க்ஷணே க்ஷணே விழுகின்றன. "யத்ய ஶக்யம் விதீயேத ஹாயாத் ஸர்வஜ்ஞ தைவஹி' என்பர் பலர்.

31. ப்ரக்ருத விஷயத்தில் ஒன்றே சொல்லி முடிக்கிறோம். நிகழும் சார்வரி வருடத் தில் நடந்த எம்பெருமானார் மஹோத்ஸவத்தில் ஸ்ரீபெரும்பூதூரில் விஶிஷ்டாத்வைத வித்வத் பரிஷத்தை ஐந்து நாள் நாம் முன்னின்று நடத்தினோம். அதில் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத் தின் மேன்மைகளைப் பலமுகமாக உபந்யஸித்தோம். உபந்யஸித்த விஷயங்களை உடனே ஸம்ஸ்க்ருதம், தமிழ், ஹிந்தி, தெலுங்கு ஆகிய நான்கு பாஷைகளிலும் விசிஷ்டாத்வைத ஸர்வஸ்வம் என்னும் பெயரால் அச்சிட்டுத் திசைதோறும் பரவச் செய்துள்ளோம் புஸ்தக ரூபேண. அபேக்ஷகர்களுக்கு அமூல்யமாக உதவி வருகிறோம், உதவுவோம். "விசிஷ்டாத் வைதத்தைப் பற்றி விசேஷமாக உபந்யாஸம் செய்து வைக்கப்பட்டது" என்றெழுதியுள்ள விவர்கள் அப்படி வைக்கப்பட்டிருக்கிற வதனைப் பெருநாடு காணப் பிரசுரம் செய்து வைக் கட்டுமே. உபயோகமற்ற வியாஸங்களால் வஸ்துவர்ணனம் செய்வதைவிட்டு இத்தகைய

உபந்யாஸ ஸ்ரீஸூக்திகளாலேயே நாடுகளையும் நகரங்களையும் நன்கு அநுக்ரஹிக்கலாமே. ஆச்சர்யமும் அத்புதமும் ஸௌந்தர்யமுமான ஸ்ரீஸூக்தி ஸாதிக்கும் வல்லமையை யாவரு மறிந்து உகக்க வழியுண்டாகுமே. இனி அடுத்த வியாஸத்திற் செல்லுவோம்.

32. "கலியனையடியோற்றிய கவிகளிற்சிலர்" என்று மகுடமிட்டு ஒருவர் வியாஸ மெழுதியுள்ளார். இவர்க்கும் கலியனுக்கும் காலிகஸம்பந்தங்கூடகிடையாது. யார் எதைப் பற்றி யெழுதுவதென்கிற நியதியில்லையா? கலியனுக்கும் கம்பனுக்கும் ஏதோ வொரு பொருத்தங்காட்ட வெழுகின்றாரிவர். தமிழில் வாக்குண்டாமென்று ஒரு சிறுநூலுண்டு; அதற்கும் ரகுவம்சத்திற்கும் பொருத்தங்காட்டவெழுந்த வொரு பண்டிதர், ஹா ஹா! பாருங்கள்! என்ன ஒற்றுமை நயம்! என்ன ஐக கண்டியம்! வாக்குண்டாமென்று வாக்கைத் தொடங்கினது இங்கு; அங்கும் * வாகர்த்தாவிவ * என்று வாக்கையே தொடங்கியுள்ளது. இன்னமும் ஒரு விசேஷமுண்டு; வாக்குண்டாமில் வாக்கு ஒரு விசையே சொல்லப்பட்டது; ரகுவம்சத்தில் அது இருவிசை சொல்லப்பட்டதல்லவா? * வாகர்த்தப்ரதிபத்தயே * என்றன்றோ இரண்டாவது பாதம். இப்படி யாரால் அமைக்க முடியும்? இத்தகைய பொருத்தத்தையும் வாசியையும் வேறு யாரால் எடுத்துக்காட்ட முடியும்?" என்று அட்டஹாஸம் செய்தாராம். மற்றொருவர் "அப்பா! அதைவிட ஸ்வாரஸ்யமாகச் சொல்லுகிறேன் கேள்; வாக்குண்டாமில் வகாரம் ஒருமுறையே பிரயோகிக்கப்பட்டது; இதில் அசட்டுத்தனங் கண்ட தேசிகன் *வந்தே வ்ருந்தாவநசரம் வல்லவீஜநவல்லபம் । ஜயந்தீஸம்பவம் தாம வைஜயந்தீ விபூஷணம்* என்று எட்டுவிசை வகாரத்தை நுழைத்து ச்லோக மியற்றினார்; இது அநுகாரமுமாகும், அதிசயமுமாகும்" என்றாராம். இப்படிப்பட்ட விமர்சகுசலர்களிலே இவர் தலைவரென்று உகக்கிறோம். நல்ல விருதுகளு மளிப்போம்.

33. அர்த்தத்தை எப்படியாவது அநர்த்தமாக்கட்டும். சப்தங்களை இவர்கள் பாழ் படுத்துவதுதான் மிக்க பரிதாபகரம். அதையே முக்கியமாக விவரிக்கிறேன். இவர் தொடங்கும்போதே 'முன்னோர் மொழிப்பொருளைப் பொன்னேபோல்போற்றுவர்' என்றார். இவர் காதில் 'மாறன் திருவாய்மொழிப்பொருளை' என்னும் ஸூக்தி பலகால் விழுந்திருப்ப தால் 'மொழி பொருளை' என்கிற நன்னூல் வாசகத்தை மொழிப்பொருளையென்று மாற்றி விட்டார். (திருவாய்மொழிப்பொருளை) என்றவிடத்திற்கும் மொழிபொருளை யென்ற விடத்திற்கும் வாசிகண்டிலரந்தோ! இது பரிஹஸிக்கத்தக்க பிழையல்லவா? * முன்னோர் மொழிபொருளேயன்றி அவர் மொழியும் பொன்னேபோல்* என்று நமது நூல்களில் நாமெடுத் துக் காட்டுவதைக் கையாள ஆசைப்பட்டவர் அதன் பொருளைக் கேட்டறிய வேண்டாவோ? இதற்கடுத்த வாக்கியத்தில் " அவர்க் கிரந்தங்களிலும் " என்றுள்ளது. இது என்ன பாஷை? இதற்கு எப்படி பதவிபாகம்? என்ன பொருள்? என்பதே புரியவில்லை. 'அவர்க்கு — இரந்தங்களிலும்' என்றல்லது வேறுவகையாகப் பதம் பிரியாது. இரந்த மென்பதற்கு என்ன பொருளென்பதை இவரையே கேட்டுணர வேணும். தமிழ் விஷயமிவை கிடக்க. அடுத்த வாக்கியத்தில் தாம் ஒரு விருந்து வழங்குவதாகக் கூறி "அதன் தாரதம்யத்திற்கு பெரியோர் தீர்ப்பே ப்ரமாணம்" என்கிறார். தாரதம்யமென்கிற வடசொல்லுக்கு என்ன பொருள்? அதை எங்கு உபயோகிப்பது? என்பதைச் சிறிது மறிந்திலரந்தோ! இரண்டு விஷயங்களை (அல்லது) பல விஷயங்களை யெடுத்துக் கூறி யிருந்தால் அங்கே தாரதம்ய பரீக்ஷண ஸார்த்தகம் ஸாப்தமாகும். இங்கே தாம் வழங்கப் போகிற விருந்து ஒன்றுதான்

ஆஸ்தாவத்திலுள்ளது. "அதன் குணதோஷ நிரூபணத்தில் பெரியோர்களே ப்ரமாணம்" என்றெழுதலாம். அதை விட்டுத் தாரதம்யத்திற்கு என்பது ஶாஸ்த்ரஜ்ஞலேகநமாகாது. தரமெது? தமமெது? என்று கேட்டால், வில்லியென்பது தரம்; வலமென்பது தமம்; (அல்லது) நாரமென்பது தரம்; அயநமென்பது தமம் என்பர்போலும். *ஐக்ஷ்வாக்ஷீ ரமோபாகீநாம ஶாயோபெஷ உஹஅஞரம்। தத்ர ஶய்யஹ ஜிஹெவ தாரதஜூவஷீக்ஷிணீ* *ஜெோகெவநஹதீஷ்ரஹஹதி தாரதஜூழ்* இத்யாதிகளைக் கண்டு தெளியக்கடவர்.

34. இதற்குமேல் "வ்யதிரேக இலக்கண முறை" என்று ஒரு அபூர்வ ப்ரயோகம் செய்கிறார். வ்யதிரேக இலக்கணமென்றால் என்ன? இது யாரால் எங்குக் கூறப்பட்டுள்ளது. என்ன பொருளிதற்கு? ஏதேனுமுதாஹரணம் காட்ட முடியுமோ? அடுத்த படியாக இவரெழுதியுள்ள வாக்ய ராஶியே உதாஹரணமாகலாம் போலும். அதாவது, "கயவர் சிலர் கவிகளின் காவியங்களிலிருந்து பலவற்றைக் களவு செய்து அசட்டுத்தனமாக அகப்பட்டுக் கொள்வதுமுண்டு." என்றன்றோ எழுதியுள்ளார். அப்படி அசட்டுத்தனமாக அகப்பட்டுக் கொண்டவிடம் இதற்கு பேறபட வொன்றுளதோ? அடுத்தபடியாக மற்றொன்று மெழுதியுள்ளார்—"வியாபாரியிடம் வைரமிருந்தால் விகல்பமாக நினைக்கமாட்டார்கள்; வேலையாளிடம் விலைமிக்க மாணிக்கமிருக்கக் கண்டால் ஸம்ஶய முதிப்பது ஸரியே யல்லவா" என்று. மிகவும் ஸரிதானிது. 'வ்யதிரேக இலக்கண'மென்கிற சொல் ஒரு வ்யபதிஷ்ட வைகருடைய வியாஸத்தில் காணப்பட்டால் 'இதற்கு ஏதோ பொருளிருக்கும் போலும்' என்று சற்று மயங்கலாம். அகப்பட்டுக் கொள்வதற்கென்றே அவதரித்தவருடைய கையினின்றும் வெளிவந்த விது கண்டார்க்கு ஸம்ஶயமில்லை, நிச்சயந்தான். வ்யதிரேக இலக்கணமென்பது ஸர்வாத்மநா அர்த்தஶூந்யமே. எதையோ எழுத நினைத்து எதையோ எழுதிற்றுமிது. லக்ஷணைக்கும் லக்ஷணத்திற்கும் வாசியறியாத வாவதூகரிவர். லக்ஷண லக்ஷணைகளிரண்டுக்கு மிங்கு ப்ரஸக்தியில்லை.

35. பேச்சுக்கள் ஸம்ப்ரதாய ஸரணியில் நடையாடுமவையல்ல; தமிழர் திரளில் பயிலுமவையுமல்ல. உலகமறிந்த ஆச்சரியம் இவர்க்கு ஆச்சிரியமாயிருக்கிறது. தவிற, மனமாற, கோர்த்து என்றித்தகைய சொல்லழகுகள் இவர்க்கே அஸாதாரணம். இவருடைய ஸொந்தமான சொற்கள் எப்படி விழுந்தாலும் கேள்வியில்லை. உதாஹரிக்கும் பாசுரத்தை உயிர்க் கொலை செய்கிறார். "ஏழை யேதலன் கீழ்மக னென்னாது" என்கிற திருமங்கையாழ்வார் பாசுரத்தை உயிராகக் கொண்டது இவருடைய வியாஸம். அந்தப் பாசுரத்தை இவர் மனப்பாடம் கொண்டவரல்லர், கற்றவருமல்லர். நம்முடைய உபந்யாஸ மாலைகளிலிருந்து கையாண்டவர். பாசுரத்தை யெழுதும்போது புத்தகத்தைப் பார்த்து எழுதமிவர் புத்தகத்திலுள்ளபடியே எழுதிக் கொடுத்திருந்தால் அகப்பட்டு அலமர வேண்டியிராது. "திருக்கோட்டியூர் நரகநாசனை நாவில் கொண்டழையாத மானிட சாதியர், பருகு நீரு முடுக்குங் கூறையும் பாவஞ் செய்தன தான்கொலோ" என்கிறார் பெரியாழ்வார். அப்படி "இவர் கையிலகப்படும் திவ்யஸூக்திகள் என்ன பாவம் செய்தனவோ" வென்று வயிறு பிடிக்க வேண்டியிரா நின்றது. 'என்பி' என்று பாசுரத்திலில்லை; எம்பி என்றுள்ளது. அஸக்ருத் என்பி, என்பி என்கிறாரிவர். ஒழிந்தலை என்றொரு சொல் ஸ்ருஷ்டிக்கிறார். "மற்றவர்க்கின்னருள் சுரந்து" என்றவிடத்தில் அபத்தத்தை அறிவித்தாலு மறியகில்லாரிவர். ஆழ்வாரருளிய சொல்வடிவம் இதுவன்று. 'மற்றவற்கு' என்பதற்கும் 'மற்றவர்க்கு' என்பதற்கும் வாசியறிய இவரிடம் சரக்கு ஏது? குறனைத் தெரிவிக்கும் சொல்லன்றோ இது.

அவன் இங்கு ஏகவசந நிர்திஷ்டனே யொழிய பஹு வசந நிர்திஷ்டனல்லன். கீழும் மேலும் ஏகவசன நிர்தேசமே ஸுஸ்பஷ்டமாகப் பல்காலுமுள்ளது. அப்படியிருக்க இங்குப் பன்மை வந்து புக ப்ரஸக்தியில்லை. இதை இங்கு நாம் விவரிப்பது *ஊமையரோடு செவிடர் வார்த்தையாமத்தனை. நமது *தானே யெழுதிய தன் சரிதையில் இரண்டாம் பகுதித் தொடக்கத்திலுள்ள சில பங்க்திகளை இங்கு எடுத்துக் காட்டுகிறோம். எதற்காக வென்னில் மேன்மேலு மெழுத ஆவல் கொண்டிருக்கு மிவர்க்கு க்ஷேமகரமான தெளிவு பிறப்பிப்பதற்காகவே. அந்தப் பங்க்திகள் வருமாறு.

* திருவல்லிக்கேணியில் வேத வேதாந்தவர்த்திநீஸபை ஏற்பட்டு ஏறக்குறைய எழுபது வருஷமாகிறது. 40 வருஷங்களுக்கு முன்வரையில் இந்த ஸபையின் காரியங்கள் வெகு உன்னதமான நிலையில் நடந்துவந்தன. வருஷந்தோறும் ஆவணி மாதத்தில் ஸாமாந்ய சாஸ்த்ரங்களிலும் உபய வேதங்களிலும் உபய வேதாந்தங்களிலும் பரீக்ஷைகள் நடத்தி ஸன்மானமளிப்பதென்று நடந்துவந்தது. வருஷந்தோறும் 50 60 வித்யார்த்திகளுக்குமேல் பரீக்ஷைக்கு வருவர்கள். ப்ரஸித்தர்களான வித்வான்கள் பரீக்ஷகர்களாக எழுந்தருள்வர்கள் நியாயத்தில் வாக்யார்த்த சர்ச்சைகளும் நடைபெறும் அக்காலத்தில், வானமாமலை பர்யந்தமான தென்னாடுகளிலிருந்தும் மைஸூர் பர்யந்தமான மேல்நாடுகளிலிருந்தும் வித்யார்த்திகள் பரீக்ஷைக்கு பரீக்ஷ்யர்களாக வந்துகொண்டேயிருப்பர்கள். அக்காலத்தில் அடியேன் திவ்வியப் பிரபந்தங்களை வியாக்கியானங்களோடும் அதிகரித்து "மூலத்திலும் வியாக்கியானங்களிலும் ஸூர்க்கத்திப் பரீக்ஷை கொடுக்க ஸித்தமாயிருக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டிருந்தவன். ஸூர்க்கத்திப் பரீக்ஷையாவது, 'கத்தியைத் தீட்டி எதிரே வைத்திட்டுப் பரீக்ஷை செய்யுங்கள்; பரீக்ஷையில் தப்பினால் அந்தக் கத்தியினாலே நாக்கை யறுத்திடுங்கள்' என்று சொல்லிப் பரீக்ஷை கொடுப்பது, இத்தகைய பரீக்ஷையை 19-ஆம் பிராயத்தில் அந்த ஸபையில் கொடுக்கச் சென்றேன். மூலத்தில் மட்டுமன்று, வியாக்கியானங்களிலும் அப்போது அந்த ஸபாவித்வான்கள் செய்த பரீக்ஷையில் சிலவற்றை இங்குத் தெரிவிக்கிறேன் [ஸ்ரீமதுபயவே மஹாவித்வான்—திருமழிசை வரதாசார்யர் ஸ்வாமியும், மற்றொரு தமிழ் வித்வானும் எனக்குப் பரீக்ஷகர்கள்]

(1) நாச்சியார் திருமொழியில் முதற் பதிகத்தில் ஒன்பதாம் பாட்டை [*தொழுது முப்போது முன்னடி வணங்கி யென்கிற செய்யுளை] எழுதிக் காட்டு என்றார்கள். உடனே அவர்களது கருத்தை யறிந்த அடியேன் அப்பாட்டின் இரண்டாமடியின் முற்கூற்றை மட்டும் எழுதிக் காட்டினேன்—"பழுதின்றிப் **பார்க்கடல்** வண்ணனுக்கே" என்று எழுதிக் காட்டினேன் இங்கு புத்தகங்களில் 'பாற்கடல்' என்றே பலரும் பதிப்பித்திருக்கின்றார்கள்; 'பால் - கடல்' என்று கருதி அங்ஙனம் பதிப்பித்தார்கள். அது பூருவாசாரியர்களின் வியாக்கியானத்திற்குச் சேராது; பார் - கடல் [பார் சூழ்ந்த கடல்] என்று ஸ்பஷ்டமாகக் காட்டிப் பெரியவாச்சான் பிள்ளை உரைவகுத்துள்ளார். அதை நான் கவனித்திருக்கிறேனா என்பதைத் தெரிந்து கொள்வதற்காகவே அவர்கள் இப்பாட்டை யெழுதிக் காட்டும்படி கட்டளையிட்டார்கள். அதைத் தெரிந்துகொண்ட அடியேன் 'பாட்டை முழுவதும் எழுதுவது எதற்கு? அப்பகுதியை மட்டும் எழுதினால் அவ்வித்துவான்கள் உகப்பர்கள்' என்றறுதியிட்டு அவ்வளவே யெழுதிக் காட்டினேன்.

(2) பெரியாழ்வார் திருமொழியில் (4–9–1) *மரவடியைத் தம்பிக்கு* என்னுஞ் செய்யுளை யெழுதக் கட்டளையிட்டார்கள். அச் செய்யுளில் மூன்றாமடியின் பிற்கூற்றை மட்டும் எழுதிக் காட்டினேன்—'திருமங்கை மலர் கண்ணும்' என்றெழுதிக் காட்டினேன். இங்கும் புத்தகங்களில் "மலர்க்கண்ணும்" என்றே பலரும் பதிப்பித்துள்ளார்கள். மலர்போன்ற கண் என்னும் பொருளில்தான் அங்ஙனே சந்தியாகும்; பூருவர்களின் வியாக்கியானம் அங்ஙனமில்லை; மலர்கின்ற கண் என்றுள்ளதனால் [உவமைத் தொகையன்றிக்கே வினைத்தொகை யாதலால்] 'மலர்கண்' என்று இயல்பாக எழுதினேன். மலர்போன்ற கண் என்கிற பொருள் அங்குப் பொருந்தமாட்டாது. திவ்யப்ரபந்த மூலப் பதிப்புகளிலும் வியாக்கியானப் பதிப்புகளிலும் (மலர்க்கண்) என்றே பதிப்பித்துள்ளார்கள். பரீக்ஷகர்கள் இந்த மருமத்தை யுத்தேசித்தே பரீக்ஷை செய்திருந்தார்கள். இரண்டிலும் அடியேன் எழுதிக் காட்டியவற்றைக் கண்ட பரீக்ஷக வித்வான்கள் "இவனை நாம் பரீக்ஷை செய்து பிழைக்க முடியாது" என்று பேசிக்கொண்டார்கள்.

ஆக இந்தப் பங்க்திகளை இங்கு நாம் எடுத்துக் காட்டியது தற்புகழ்ச்சிக்காகவல்ல; தமிழில் வெகு நுட்பமாக நோக்க வேண்டிய விஷயங்கள் இப்படிப்பட்டவை யுள்ளனவென்றும், அவை இவருடைய புத்திக்கு ஸுதராம்வைஷம்யிகங்களென்றும் காட்டுதற்காக வென்க.

36. இவர்க்கு முடிவாகவொன்று உணர்த்தி நிற்போம்; கம்பராமாயணத்திலும் பிள்ளைப்பெருமாளையங்காருடைய அஷ்டப் பிரபந்தத்திலும் ப்ரக்ஷேப வகையிற் பிற்காலத் தவர்களால் சேர்க்கப்பட்டுள்ள செய்யுள்களைக் குறிப்பிடுமிடத்து 'ஆழநீர்க் கங்கை' என்கிற இச்செய்யுளையும் குறிப்பிட்டுள்ளார்கள் ஆராய்ச்சிவல்லவர்கள். ஆகவே இச்செய்யுளைக் கொண்டு ஒரு விவக்ஷிதமும் ஸாதிக்கப் பாங்கில்லை. ஆனால், இச்செய்யுள் ப்ரக்ஷிப்தந்தானா? அன்றா? என்கிற ஆராய்ச்சியில் நாம் இறங்கினதில்லை. பல ஏட்டுப் பிரதிகளை வைத்துக் கொண்டு சோதிக்க வேண்டும். அதற்கு அவகாசம் விளைந்ததில்லை. குஹப் பெருமாளிடத் தில் காட்டப்பட்ட இத்தகைய ப்ரேமவிசேஷம் ஸ்ரீராமாயணத்தில் காணக்கிடையாதிருக்க, எந்த ஆதாரங் கொண்டு ஆழ்வாரா லருளிச் செய்யப்பட்டதென்கிற விமர்சத்திலே புக்கு மருமங் கண்டுணர்த்தினால் அதுவன்றோ மாண்புடைத்தாம். .... (*)

37. இனி அடுத்த வியாஸத்திற்குச் செல்வோம். ஸ்ரீராம குண ஸமந்வயம் என்பது இந்த வியாஸம். எல்லா வியாஸங்களுக்கும் பொதுவாக ஒரு முக்கிய விஷயமுரைப்போம். * ஸ்வயம் வ்யாக்யா ஸமாரம்ப்யா ந* என்கிற நியமம் யாவரு மறிந்தது. இன்னது எழுதக் கடவோமென்று முன்னம் மனத்தில் ஒரு ரேகையிட்டுப் பின்னையன்றோ எழுதத் தொடங்க வேணும். அந்த பத்ததி இவர்களில் யாரிடமுமில்லை. வடமொழியில் ஒரு சுலோகமும், தென்மொழியில் ஒரு பாட்டும் காட்டுகிறோ மிங்கு; (சுலோகம்.) * வீரக்ஷத்ரியவைஸ்ய ஸ்ரூத்ரவநிதா வைராக்ய வாராம்நிதி: வைஸம்பாயந வைநதேய விஷஜோ வைஷஜ்ய வாரம்முதா:। ஸைதவம் க்ருஷ்ணஸம்க்ஷயம் கஷயதாம் க்ருஷ்ணாஷ்டவாடாதிபி: கௌபிஷ்யம் க்ருபிஷாகரதிக்ஷய அணம் தொத்தெரஷ்டி நிதம்யம் வயம்॥ * (பாட்டு.) *காடுறையுங் காவலோன் காடுறைய வேண்டிற்றோ? வீடுறைய வீம்பதனால் வேணிலத்தில்—சூடுமலர்க், கூந்தலார் குற்றலக் கோவலனார் கோதைதனை, வேந்தனைய் விண்ணுளும் வீறு. * இந்தப் பாட்டையும், மேலேயுள்ள சுலோகத்தையும் ஒருவர் பல பண்டிதர்களிடம் சொல்லிப் பொருள் கேட்பராம். இதில் ஏதோ விசேஷார்த்த மிருக்கிறதென்று மருண்டவர்கள் எப்படியாவது பொருள் கண்டுபிடித்துப் புகல வேண்டுமென்று ஊக்கங் கொண்டு ஊன்றி யூன்றிப் பார்த்தும் பலரைக் கேட்டும் போதுபோக்கித் திரிவர்களாம். காட்டிய சுலோகமும் பாட்டும் வீண்வம்பன் இயற்றியவை யென்பதை ஒரு நொடிப்பொழுதில் தெரிந்துகொண்டு சிரிக்கவேண்டியிருக்க, இவற்றில் ஏதோ விஷயமிருப்பதாக மருண்டு கிடப்பாரு முளரன்றோ. இந்த சுலோகமும் பாட்டும் போன்றவையே மலரில் காணும் வியாஸங்கள் பெரும்பாலும். வ்யாஸ ஸந்நிவேச ஸூக்ஷ்மதர்சிகளுக்கு இது தெரிய வழியில்லைதான்.

38. இந்த குணஸமந்வய வியாஸத்தில் சுவையென்பது லவலேசமேனு முண்டோ வென்று யாரும் பார்க்கலாம். சய்யா விலாஸம் விளங்கும்படியான அபூர்வ விஷய விந்யாஸ மொன்று மில்லையானாலும் அசட்டுத்தனம் மிக்க சொற்களும் பொருளும் புகாமலிருந்தால் விசேஷமல்லவா? ஐயோ! அதுதானுமில்லையே. குணவான் என்பதை விவரிக்குமிடத்து எழுதுகிறாரிவர்—"குஹன் என்பவன் ஒரு வேடன்.........காடுகளில் தனது தொழிலை நடத்தி ஜீவிப்பவன்" என்று. ஆயிரம் ஓடங்களுக்குத் தலைவரான குஹப் பெருமாளைக் குறித்து "காடுகளில் தனது தொழிலை நடத்தி ஜீவிப்பவன்" என்றெழுதத் தோன்றிற்றே ஒருவர்க்கு. குஹன் காடுகளில் நடத்திய ஜீவனத் தொழில் யாதோ? மரங்கள் வெட்டினாரா? விறகு சுமை கட்டினாரா? கொக்குகள் சுட்டாரா? வழி பறித்தல் செய்தாரா? என்று வினவினால் 'எல்லாந்தான் செய்திருப்பர்' என்றே விடை கூறுவரிவர். நீர்க்கரையிலேயே

நிச்சலும் வாழ்ந்த விவரைக் காடுகளில் திரிந்து தொழில் நடத்தி ஜீவித்தவராக எழுதுபவர் மஹாவிவேகியாயிருக்க வேண்டும். இதற்கு "ம்ஹொ மஹநமொ அஶ:" என்று வால்மீகி சொல்லியிருக்க வில்லையோ? என்று உறுமுவர். ஸத்குரு ஸேவை பண்ணி ஸம்ப்ரதாயம் கேட்கப் பெருத பாவமன்றோ விது.

39. மேலே வீர்யவானுக்கு அர்த்தமெழுதுகிறார்—"விபீஷணன் ராமனிடம் வந்து ஶரணமடைந்தபோது ஸுக்ரீவாதிகள் அவனைச் சேர்த்துக்கொள்ளக் கூடாதென்று எவ்வளவோ மன்றாடினார்கள்; அஃதெல்லாம் ராமனிடத்தில் பலிக்கவில்லை; அவனை யழைத்து வர ஊர்ஜிதமான உத்தரவு கொடுத்தார்; அவ்வளவு வீர்யமுள்ளவர் ராமன்" என்று. இப்படிப் பட்ட விஶேஷார்த்தம் யாருக்குஸ்புரிக்கும்? விபீஷணனைச் சேர்த்துக் கொள்ளக் கூடாதென்று மன்றாடின வானர வீரர்கள் நால்வரைவர்; சித்ரகூடத்திற்கு வந்து மகுடம் புனைய மீண்டு வரவேணுமென்று மன்றாடினவர்கள் எண்ணிறந்தவர்கள்; அவர்களோ மஹாஜ்ஞான நிதிகள். அவர்களுக்கும் வசப்படாமல் 'கண்டிப்பாக வரமாட்டேன்' என்று மறுத்தது மஹாவீர்யமல்லவா? சூர்ப்பணகை வந்து தன்னை மணந்துகொள்ள வேணுமென்று வேண்ட, அது முடியவே முடியாதென்று உறுதியாகக் கூறின ராமனுடைய வீர்யமே வீர்யம். ஸுமேதஸ்ஸென்கிற மஹர்ஷி தன்னாச்ரமத்தில் ஒரு நாள் தங்கிப் போக வேணுமென்று வேண்ட அது மாட்டேனென்று மறுத்த ராமனன்றோ உண்மையான வீர்யவான்! இப்படி யெழுதிக்கொண்டே போகலாமிவர். நமது அபூர்வ ராமாயணத்தை ஸேவித்து வாழ பாக்யமில்லையே யிவர்க்கு! கடைவீதிப் புராணக்காரர்களென்று சிலருண்டே; அவர்களுக்குங்கூட ஸ்புரியாத அர்த்த விசேஷங்கள் இவர்க்கு ஸ்புரிப்பது அப்ரமேய மாச்சர்யம். வ்யாக்யாதாக்கள் தமது உக்திகளைத் தாமே விவரிப்பதென்றொரு புடையுண்டு; அதுவும் இவரிடத்தில் வீர்யவத்தரம். "அஸத்யவாதியாக" என்றெழுதிவிட்டு, ப்ரியா வாசகர்களுக்கு இது பொருள்படாதென்று தாமே யுணர்ந்துகொண்டு, உடனே "அதாவது பொய் சொன்னவராக" என்று உரையிடுகிறார். கண்ணபிரான் கம்ஸவதத்திற்காகத் திருவாய்ப்பாடியிலிருந்து மதுரைக்கு எழுந்தருளும் வட்டத்தை உபந்யஸிக்குமொருவர் "அங்கே ரஜகன் ரஜகன் என்கிற வொரு வண்ணான். வஸ்த்ரம் வஸ்த்ரமென்கிற துணிகளை மூட்டையாகக் கட்டி யெடுத்துக்கொண்டு வந்தான்—அதாவது க்ஷுமசநம் செய்தான்" என்று சொல்லிப்போவராம். அதேக்கதைதானிது. அல்பஸாரமுமற்ற விதனைவிட்டு மேலே போவோம்.

40. சீற்றமிலாதான் என்றொரு வியாஸம். இதில் "தசரதர் ஸ்ரீராமனை யுவராஜாவாக ஆக்க உத்தேசிப்பதாகவும் அவ்விஷயத்தில் அவர்களுடைய அபிப்ராயத்தையும் வினவினார்" என்பது உபக்ரம வாக்யம். இதில் 'உத்தேசிப்பதாகவும்' என்கிற உம்மைக்கு எங்கே அந்வயம்? 'அபிப்ராயத்தையும்' என்ற உம்மைக்கு எங்கே அந்வயம்? என்று கேட்டுவிட்டால் இந்த வித்வான் திணறி நிற்பர். 'உத்தேசித்து அபிப்ராயத்தை வினவினார்' என்று ஸமுச்சயகந்தமுமின்றிக்கே எழுதவேண்டியிருக்க, அஸ்தானே அசட்டுத்தனமாக உம்மைகளைப் புகுத்தி ஶோசநீயராயினர். தாமே ஆலோசித்துப் பார்க்கட்டும்; தமரோடுங் கூடி விமர்ஶிக்கட்டும். தமிழிலுள்ள இந்த வாக்கியத்தை ஸம்ஸ்க்ருதத்தில் மொழி பெயர்த்துப் பார்க்கட்டும். எதற்கும் எதற்கும் ஸமுச்சயம் செய்ய முடிகிறதென்பதை இப்பண்டிதர் தாமே தெரிந்துகொள்வர். இத்தகைய அசட்டெழுத்துக்கு மூல காரணம் வ்யுத்பத்திக் குறையே. இவர்க்கு மற்றொரு பண்டிதரும் துணைவராயிருக்கிறாரென்பதை முதலிப்போம்.

41. நாராயண வேதம் என்று மகுடம் புனைந்ததொரு வியாஸம். இது முக்கால் பக்கமேயுள்ளது. இதை விமர்சிக்கப் பல பக்கங்கள் வேண்டியிருந்தாலும் அதீவ ஸம்க்ஷிப்யதே. இதில் "விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸ்தாபகராயும்" என்று ஓர் உம்மை காண்கிறது. இதற்குச் சேர மற்றோர் உம்மை வரவேண்டாமா? அடுத்த உம்மை (ராமாநுஜருக்கும்) என்றுள்ளது. விசேஷணத்திற்கும் விசேஷ்யத்திற்கும் ஸமுச்சயமிடுவது விலக்ஷணஶைலீ விலாஸமேயாகும். "ஸித்தாந்த ஸ்தாபகராயும் ஸகல வித்யாவாஹிநீ ஜந்மஶைலராயும் கொண்டாடப்படும் பகவத்ராமாநுஜர்க்கு" என்று எளிதாக எழுதும் வகையறிந்திலரந்தோ! இத்தனை விரிவும் வேண்டா. "ஸித்தாந்தஸ்தாபகரும் ஸகல வித்யாவாஹிநீஜந்மஶைலருமான ராமாநுஜர்க்கு" என்னுமளவே போதும். எந்தச்சொல் எந்தச்சொல்லோடே அந்வயிக்குமென்பதைக்கூட அறியகில்லாதார் எழுதப்புறப்படுவது ஸாஹஸமல்லவா?

மற்றொரு ஸமுச்சயமும் காண்மின்;—"ஸ்ரீராகவன் தன்னுடைய சரிதங்களிலும், தன்னைச்சேர்ந்தவர்களான ஸீதா லக்ஷ்மணன் பரதன் சத்ருக்நன் முதலியோருடையனவும் சரிதங்களிலும் விளக்கிக் காட்டியிருக்கிறார்" என்கிறார். இங்கு தன்னுடைய சரிதங்களிலும் முதலியோருடைய சரிதங்களிலும்' என்பதே பர்யாப்தம். 'முதலியோருடையனவும்' என்பது அநந்விதம். [ராகவ: ஸ்வசரிதேஷு ஸீதாதீநாம் சரிதேஷு ச வ்யாஜஹார] என்பதேயன்றோ ஸம்மதம். இடையில் ஓர் உம்மை புகுத்துவதனால் என்ன பாதகம்? என்பர்; ஒரு பாதகமுமில்லை. ஆனால் 'உடையனவும்' என்பது தவறு. (உடையன) என்பதை ஷஷ்டியாக இவர் நினைத்திருக்கிறார். அது பிசகு. அது ப்ரதமையே. உடையவும் என்றிருந்தால் ஷஷ்டியாகும். அப்போது அதிக பாதகமில்லை. ஷஷ்ட்யர்த்தங்கொண்டு ப்ரதமாந்தமாக ப்ரயோகித்திருப்பதால் அநந்விதமே. ஆனால் இதை க்ரஹிக்ககில்லாரிவர்.

42. மற்றும் கேளீர்; இந்த வியாஸகாரர் விலக்ஷண ப்ரயோகங்கள் செய்கிறார். மனபெழுச்சி, இக்காலத்திய யியல்பு இத்யாதிகள் அவையாம். மனம்+எழுச்சி; எப்படி சந்தியாகும்? காலத்திய+இயல்பு; எப்படி சந்தியாகும்? என்று இவர்களே விசாரித்தறிக. "ரஹஸ்யார்த்த க்ருந்தத்தை" என்றொரு ப்ரயோகம். க்ருந்தமென்பது இன்னதென்று விளங்கவில்லை. க்ருஷ்ண, க்ருத்ஸ்நம், ஸ்ருத்யம், ஹ்ருத்யம் என்னுமிவற்றைத் தமிழில் க்ருந்தமென்றெழுதுவதுண்டு. ஆனால் க்ருஷ்ணாதிபதங்களுக்கு இங்கு அவகாஶமேயில்லை. ஹ்ருத்யம் என்கிற வடசொல்லையே இவர் க்ருந்தமென்றெழுதியுள்ளாரென்பது நிஸ்ஸந்தேஹம். இத்தகைய திரிபுணர்ச்சி இவர்களின் திரளில் மிகமிகவுள்ளது. ப்ரும்மம், ப்ரும்மம் என்று இந்த மலரிலும் பல்கால் காணப்படுகிறது. இது எந்த வடசொல்லின் விகாரமோ தெரியவில்லை. (ப்ர) என்கிற அக்ஷரத்தையோ (ப்ரு) என்கிற அக்ஷரத்தையோ தமிழில் (ப்ரு) என்றெழுதுவதுண்டு. ப்ருஹ என்னும் வடசொல்லை யெழுதவெண்டும்போது (ப்ரு) என்றெழுதுவதும்; (ஹ்ரு) என்னும் வடசொல்லை யெழுதவேண்டும்போது (க்ரு) என்றெழுதுவதும் இந்த வித்வான்களுக்கே உரித்தாம். இங்கே (ரு) என்னுமெழுத்து எப்படி வந்துபுகும்? நதீ என்கிற வடசொல்லைத் தமிழ்வார்த்தையாக எழுதவேணுமானால் (நதீ) என்னக்கூடாது. நதியென்னவேணும். அதில் வேற்றுமையுருபேற்ற வேணுமானால் (நதிகளினுடைய, நதிகளுக்கு) என்னவேணும்; இவர் (நதீக்களுக்கு) என்கிறார். ஸ்வல்ப விமர்ஶ ஶக்தியுமற்ற இவர்களைப்பொருள்படுத்தி நாம் அரியபெரிய விஷயங்களை வாரியிறைப்பது தகுதியன்று. குணஸமந்

வய வியாஸ காரரான D. T. என்பவர் (ப்ரஸ்தாபிக்க) என்று பலகாலெழுதுகிறார். ப்ரஸ்தாபம் என்கிற சொல் எந்தபாஷையிலாவது கண்டதுண்டா? வகாரத்திற்கு வகாரம்ஆதேசமென்று எங்கேனும் விதிகண்டதுண்டோ? மநஸ்தாபமிருக்கும்போது ப்ரஸ்தாபம் ஏனிருக்கக்கூடாதென்று உறுமுவர். * ஸுஹ்ருதணெ ஸதா ராஷி ஹகாரொராஷி விஷீஷணெ। ஸ்யம் அ ராக்ஷஸபெ ஷெ ராஹணெ। ந த ராவணः॥* என்றவர்கள் இவர்களே போதும். இவ்வளவோடு விட்டுத் தொலைப்போமிவர்களை. ந்ருஸிம்ஹப்ரியா நிரீக்ஷணம் (2) முற்றிற்று. ... . (*)

ந்ருஸிம்ஹப்ரியா நிரீக்ஷண-அனுபந்தம்.

ப்ரக்ருதமான ஸ்ரீராமஜயந்திமலரின் அட்டையின் மூன்றாவது பக்கத்தில் பாரிஜாதபுஷ்பம் என்கிற ப்ரபந்தஸாரவைபவம் என்றொரு புத்தகம் வெளிவந்திருப்பதாகத் தெரிவித்து, இதை வி. பி. பி. யில் அனுப்ப ஸௌகரியமில்லை யென்றும் 1 ரூ. 70 நயாபைஸா மணியார்டர் செய்து பெறலாமென்றும் தெரிவித்திருக்கிறது. பாரிஜாத புஷ்பமென்னுமிப்புத்தகம் 1960 நவம்பர் மாதத்திலேயே அச்சு முடிந்து வெளியேறியது. நமது ஸ்ரீராமானுஜன் 143-ல் "பாரிஜாதபுஷ்பமானால் துர்நாற்றம் வீசுமோ?" என்னும் வியாஸம் வெளிவந்திருப்பதை உலகமெல்லாம் வாசித்துளது. அதிலேயே ராஜமன்னார் ஸந்நிதி ஜ்யோதிர்ப்பூஷணம் வங்கீபுரம் ராஜமையங்காரெழுதிய துர்க்கந்த தூரீகரணம் என்கிற நூலும் வெளிவந்துளது. ஆக ஐந்தாறு மாதங்களுக்கு முன்னமே ஹதமானவொரு புத்தகத்திற்கு இன்னமும் உயிர் இருப்பதாக வைத்து, அது இப்போதுதான் வெளிவந்ததாகக்காட்டி, அதில் பல விஷயங்கள் அடங்கியிருப்பதாகவுங் காட்டி, அதை விலைகொடுத்தே வாங்கவேணுமென்றும் முன்பணமனுப்பியே பெறவேணுமென்றும் தெரிவிப்பது வெகு விந்தை. சென்ற ஐப்பசி மாதத்தில் திருவிந்தளூரில் நடந்த துலாகாவேரித் திருநாளிலேயே இந்த துர்க்கந்த புஷ்பம் அங்கு ஏகாந்த ப்ரசாரமடைந்ததாகவும் அழிகிங்கருடைய நியமனமான பிறகே இது லோகாந்த ப்ரசாரமடையப்போவதாகவும், இது சிலகாலம் ஏகாந்த வாஸமே செய்யுமென்று ப்ரசாரகரால் கூறப்பட்டதாகவும் மேலே குறித்த ராஜமையங்கார் முன்னுரையில் அறிவித்துள்ளார். இதை யொருவரும் மறந்திரார். ஆக, ஏற்கெனவே கண்டனம் பெற்று முடிந்துபோன இப் புத்தகம் தலைகாட்ட வழியில்லையாதலால் இப்போதும் இது "நஞ்சுடைமை தானறிந்து நாகங் கரந்துறையும்" என்ற ரீதியில் அஜ்ஞாதவாஸமே செய்து வருகின்றது. சார்வரி பங்குனி 27 ஆம் தேதியாகிய இன்று ஒருவர் இப்புத்தகத்தை நம்மிடம் ஏகாந்தமாகவே கொடுத்தார். இன்றே நாம் எழுதிமுடித்த பூதிகந்திபுஷ்பப்ரஞ்சநம் என்னும் நூலின் ஒரு பகுதி இவ்விதழில் வெளிவருகின்றது. ஸஹ்ருதய ரஸிகர்கள் கடாக்ஷித்து இன்புறுக. ... (*)

3. லோகாபிராமநல்வார்த்தைத்திரள்.

43. ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் பல பல ஆசாரியர்கள் அவதரித்திருந்தாலும் பிள்ளை லோகாசாரியரும் மணவாள மாமுனிகளுமே ஆசார்யத்வ பூர்த்தியுள்ளவர்களென் பதை அடியேன் பலகால் பல நூல்களில் விவரித்திருக்கின்றேன். இவ்வாசாரியரிருவர்க ளின் ஸ்ரீஸூக்திகளினால்தான் ஸ்ரீவைஷ்ணவ வுலகம் வாழ்ந்து வருகின்றது. பிள்ளை லோகா சாரியரைக் காட்டிலும் மணவாளமாமுனிகளின் சிறப்புத்தான் உண்மையில் உயர்ந்தது. அமுதக் கடல்போன்ற அவருடைய திவ்ய ஸ்ரீஸூக்திகளை ஆழ்ந்து அநுபவிப்பாரில்லையே யென்கிற வருத்தம் கடல் சூழ்ந்த விம்மண்ணுலகில் அடியேன்போல்வார் சிலர்க்குத் தானுள்ளது. ‘மற்றும் பல ஆசாரியர்களைப்போலே இவரும் ஒரு ஆசார்யர்’ என்று நினைப்பாரும், வேறு சில ஆசாரியர்களை மேம்பட்டவர்களாக நினைத்து இவரைத் தாழ நினைப்பாரும் சிலர் இருந்தாலும் அவர்களைப்பற்றி நமக்குக் கவலையில்லை. அடியேன் ஒரே ஒரு வார்த்தைதான் சொல்லுவது;—மற்ற ஆசாரியர்களின்க்ரந்தங்களை யெடுத்து வாசிக் கும்போது அவரவர்களின் ஞானத்தைப் பரிச்சேதித்து விடமுடியும்; மணவாளமாமுனி களின் வியாக்கியான ஸ்ரீஸூக்திகளை ஸேவிக்கும்போது ஒவ்வொரு சொல்லையும் ஒவ்வொரு வாக்கியத்தையும் நோக்குமிடத்து “இவரொருவரே அபரிச்சிந்நஜ்ஞாநநிதி” என்று அஸூயை யற்றவர்கள் அறுதியிடத் தட்டில்லை—என்று.

44. “அமுத மென்மொழி” என்றொரு சொல் திருவாய்மொழியில் (6–5–2) வருகிறது. உண்மையில் அமுதமொழி தந்தவர் யாவர்? என்று கேட்டால் ‘மணவாளமாமுனிக ளொரு வரே’ என்று கூசாது கூறலாம். மாமுனிகள் மற்றுள்ள ஆசாரியர்களுக்கு முன்னே திருவவதரித்து திவ்யஸூக்திகளை யருளிச் செய்திருந்தாராகில் ஒவ்வோராசார்யரும் அந்த ஸ்ரீஸூக்திகளை எவ்வளவோ கொண்டாடியிருப்பர்கள் என்பது ஒருபுறமிருக்க, இவருடைய ஸ்ரீஸூக்திகளைக் கண்டபின் ஒருவரும் ஒன்றெழுத எழுத்தாணியைத் தொட்டிரார்கள். ஆனால் மற்றுள்ள ஆசாரியர்களின் திருவாக்குக்களும் இந்நிலவுலகில் அவதரிக்க வேண்டு மென்றும், அப்போதுதான் வாசி தெரியுமென்றும் திருவுள்ளம் பற்றிய எம்பெரு மான் மணவாளமாமுனிகளை ஆசார்ய பரம்பரையின் அந்தத்திலே அவதரிப்பித்தருளினன் என்று ஸ்ரீமத் புரிசை ஸ்ரீரங்காசார்ய ஸ்வாமி திருவாக்கில் பலகால் கேட்டிருந்தேன்.

45. மாமுனிகளின் திவ்யஸூக்தி காம்பீர்ய மாதுர்யங்களை அக்காலத்தில் ஸ்துதி நூல்களில் எழுதி வைத்தவர்கள் எறும்பியப்பா முதலானோர் பலர் இருந்தாலும், அஸ்மத்குல கூடஸ்தரான அண்ணா (வர வர முநிசதகத்தில்) “த்ராக்ஷாமதிக்ஷிபதி நிந்ததி மாகரந்த தாராம் ஸூதாரஸஜரீம் அதரீகரோதி” என்று பொறித்து வைத்ததுபோல் வேறு யாரும் பொறித்து வைத்திலர். அப்படிப்பட்ட மதுரகம்பீர மென்மொழிகளை எத்தனை தடவை ஸேவித்தாலும் *அப்பொழுதைக் கப்பொழுதென்னாராவமுதமே என்னும்படி ஒவ்வொரு க்ஷணத்திலும் அபூர்வமாகக் காண்கிறதேயொழிய ‘நேற்று ஸேவித்த ஸ்ரீஸூக்திதானே இது’ என்று ஒருகாலும் தோன்றுவதில்லை. இது அஸூயை யற்றவர்களுக்கு அநுபவ ஸாக்ஷிகம்.

46. ஸ்வாமியின் வியாக்கியானங்களெல்லாம் தமிழென்று பேரே யொழிய அத்தனை யும் ஸம்ஸ்க்ருத வாக்யஜடிலம். அந்த ஸம்ஸ்க்ருத வாக்கியங்களின் வைகரி வேறு எவருடைய

க்ரந்தத்திலும் காணமுடியாததே. நான்கு சாஸ்திரங்களையும் அறுபத்துநான்கு கலைகளையும் கரைகண்டவொரு பண்டிதோத்தமர் இக்காலத்திலிருப்பதாக வைத்துக்கொள்வோம். முமுக்ஷுப்படியிலோ, ஸ்ரீ வசநபூஷணத்திலோ, தத்வத்ரயத்திலோ, ஆசார்யஹ்ருதயத்திலோ ஒரு சூர்ணிகையை அவரிடம் கொடுத்து இதற்கு வியாக்கியான மெழுதும் என்றால் அப்போது தெரியும் நெடுவாசி. "பதாநாம் ஸௌப்ராத்ராத் அநிமிஷ நிஷேவ்யம் ச்ரவணயோ:" என்கிற பட்டர் ஸ்ரீஸூக்திக்கு ப்ரதாநலக்ஷ்யமான அத்புத ஸூக்தி ஸந்நிவேசங்கள் மாமுனிகளின் வியாக்கியான திவ்ய க்ரந்தங்களிலே ஸஹஸ்ரமன்று, பரஸ்ஸஹஸ்ரம். இதர ஸம்ப்ரதாயஸ்தர்களுக்கு மாச்சரியத்தாலே அவை தோன்றுவதில்லை. பாக்ய வசத்தாலே ஸத்ஸம்ப்ரதாயத்திலே ஜனிக்கப்பெற்றவர்களோ வென்னில், மதியின்மை ஆபிமுக்க்யமின்மை ஆதரமின்மை ஆராய்ச்சியின்மை முதலிய ஹேது விசேஷங்களாலே உணர்ந்து கொள்ள பாக்யஹீநர்களாகிறார்கள். அஸூயுக்கள் அளவுகடந்த தூஷணங்களைச் செய்து ஸ்வய: வதநிஹதா!

47. நன்றாகக் காய்த்துப் பழுத்துத் தழைத்திருக்கின்ற தேன்மாமரத்தின்மீது கல்லையோ தடியையோ விட்டெறிந்தால் அதனால் அந்த மரத்திற்குச் சீற்ற முண்டாகிறதா? ஸந்தோஷமுண்டாகிறதா? என்பதை நாம் தெரிந்துகொள்ள முடிகிறதில்லை. ஆனால் கல்லடியோ தடியடியோ பட்டவுடனே அந்த மரம் செய்யும் செயலை மட்டும் நாம் கண்ணாரக் கண்டு வருகிறோம். என்ன காண்கிறோம்? அந்த மரம் தன்னிடத்திலுள்ள சிறந்த கனிகளை வீசியெறிந்து மஹோபகாரம் செய்வதைக் காண்கிறோம். நாய் நரி முதலான சில ஹேயமான ஜந்துக்களுள்ளன. அவற்றின்மீது ஒருவர் கல்லையோ தடியையோ விட்டெறிந்தால் உடனே அவை என்ன செய்கின்றன. பகவான் அந்த ஜந்துக்களிடத்திலே சிறந்த பொருளாக எதையும் படைத்திராமையாலே கர்ண கடோரமான சப்தங்களைச் செய்து அனர்த்தத்தை விளைப்பது தவிர வேறொன்றும் அந்த ஜந்துக்களா லாகிறதில்லை.

48. காழிச் சீராம விண்ணகரத்திற்குப் பதிகம் பாடின திருமங்கை யாழ்வார் "நெட்டிலைய கருங்கமுகின் செங்காய் வீழ நீள் பலவின் தாழ்சினையில் நெருங்கு பீனத், தெட்ட பழம் சிதைந்து மதுச் சொரியுங் காழிச் சீராம விண்ணகர்" என்றருளிச் செய்கிறார். ஸ்வாப தேசார்த்தம் ஸூபிக்ஷமான பாசுரம் இது. இதில் மேலெழச் சொல்லுவதென்னவென்றால், பாக்கு மரத்திலிருந்து கொட்டையான காய்கள் உதிர்ந்து பலாமரத்தின் மீது விழுந்தனவாம்; அக் காய்கள் கனியப் பழுத்த பலாப்பழத்தின்மீது விழுந்தவாறே அப்பழம் சிதைந்து தேன்வெள்ளம் சொரிந்ததாம். அரும் பெரும் பொருள்களை வெளியிடவந்த ஆழ்வார்கள் பாக்கு 'விழுந்ததையும் பலாப் பழம் சிதைந்ததையுமா சொல்லி நிற்பர்கள்? மஹான்களின்மீது ஸ்வத்ருக்யநமாகிற அடி விழுந்தால் மது வெள்ளந்தானெழுகும்? என்று சாஸ்த்ரார்த்தமே இங்குக் காட்டினபடி.

49. மாமுனிகள் உபதேசரத்தின மாலையில் சில ஆழ்வார்களுக்கு ஒரே பாசுரம், சில ஆழ்வார்களுக்கு இரண்டு பாசுரம்...என்றிப்படி வாசிவைத்துப் பாசுரம் பாடியுள்ளார். திருமழிசையாழ்வார், குலசேகராழ்வார், தொண்டரடிப்பொடி யாழ்வார், திருப்பாணாழ்வார்—இவர்களுக்கு ஒவ்வொரு பாசுரம். முதலாழ்வார்கள், திருமங்கை மன்னன், நம்மாழ்வார், மதுரகவிகள்—இவர்களுக்கு இரண்டிரண்டு பாசுரங்கள். ஆண்டாள் எம்பெருமானார்—இவர்களுக்கு மும்மூன்று பாசுரங்கள், பெரியாழ்வார்க்கு ஐந்து பாசுரங்கள். ஆக

இவ்வண்ண மருளிச் செய்து வந்தவர், பிள்ளை லோகாசார்யருக்கு ஸ்ரீவசநபூஷணத்தை மட்டு முத்தேசித்து ஏழு பாசுரங்க ளருளிச் செய்தார். இதனல் மணவாளமாமுனிகள் மிகச் சிறந்த சாஸ்த்ரமென்று திருவுள்ளம் பற்றியது ஸ்ரீவசநபூஷண மொன்றேயென்று தேறும்.

50. அந்த திவ்ய சாஸ்திரத்தின் பெருமை ஏழுபாசுரங்களிலுல் விளக்கப்பட்டாலும் அவற்றுள் ஒரு பாசுரம் லோகோத்தரமாக அமைந்துள்ளது; அதாவது,

"ஆர்வசனபூடணத்தி னாழ்பொருளெல்லா மறிவார்
ஆர் அதுசொல் நேரிலனுட்டிப்பார்—ஓரொருவர்
உண்டாகி லத்தனைகா ணுள்ளமே! எல்லார்க்கும்
அண்டாததன்றே வது." என்பதாம்.

இதில், ஸ்ரீவசனபூஷணத்தினுடைய கம்பீரமான அர்த்தங்களை யெல்லாம் அறியவல்லாரில்லை என்று முதலடியில் அருளிச் செய்தார். "விசதவாக் சிகாமணிகளான ஸ்வாமியின் திவ்ய மான வியாக்கியானம் திருவவதரித்திருக்க, அதுகொண்டு ஆழ்பொருள்களை யறிய என்ன குறை?" என்று சிலர் விஜ்ஞாபிக்க, உடனே "ஆர் அது சொன்னேரிலனுட்டிப்பார்" என்றார்; ஒருவாறு பொருள் தெரிந்து கொள்ளலாமாலும் அந்த ஸ்ரீவசநபூஷண சாஸ்த்ரமிட்ட கட்டளையிலே அநுஷ்டிக்கவல்லார் ஒருவருமில்லையே! என்றார்.

51. ஒருவராலும் அநுஷ்டிக்க முடியாத விஷயம் ஸ்ரீவசநபூஷணத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதென்று விமர்சிக்க வேணுமே. அத்தகைய விஷயங்கள் அதில் பல பல இருந்தாலும் ப்ரக்ருதம் ஒன்றே யெடுத்துக் காட்டுகின்றே னடியேன். அடியேனிட்ட உபதேச ரத்தினமாலைத் திவ்யார்த்த தீபிகையுரையில் இப்பாசுரத்தின் உரையின் முடிவில்— "அநுஷ்டிக்க முடியாதபடி இதில் என்ன விஷயம் கூறப்பட்டிரா நின்றதென்னில், *குற்றம் செய்தவர்கள் பக்கல் பொறையும் க்ருபையும் சிரிப்பும் உகப்பும் உபகாரஸ்ம்ருதியும் நடக்க வேணும்* என்று இங்ஙனே யருளிச் செய்யப்பட்டுள்ள பல பல விஷயங்கள் அநுஷ்டிக்க வரியன என்னுமிடம் சொல்ல வேணுமோ?" என்றெழுதியுள்ளேன்.

ஸ்ரீவசநபூஷணத்தில் 365-ஆம் சூர்ணை—"குற்றம் செய்தவர்கள் பக்கல் பொறையும் க்ருபையும் சிரிப்பும் உகப்பும் உபகாரஸ்ம்ருதியும் நடக்கவேணும்." என்பது. அபராதப்பட்டவர் களுக்கு அபராதத்திற்குத் தக்கபடி தம்மாலியன்ற தண்டனை செய்யவேண்டியதுதான் முக்கியம் என்பது அடியேனைப் போன்ற அவிவேகிகளின் நினைவு. மஹாவிவேகிகளோ வென்னில், அப்படி நினையார்கள். அந்தக் குற்றவாளர்களிடத்திலே பொறை, க்ருபை முதலானவற்றையே காட்டுவர்கள். பொறுமை காட்டவேணும், க்ருபைபண்ணவேணும், சிரிக்கவேணும், உகக்கவேணும். நன்றி பாராட்டவேணும்—என்று ஐந்து விஷயங்கள் இங்குச் சொல்லப்படுகின்றன. ஜநந்யாசார்யரென்பவருடைய ஸம்க்ஷிப்தமான வியாக்கி யானமு மொன்று இருந்தாலும் அதனல் ஓரிடத்திலும் ஒரு த்ருப்தியுமுண்டாகிறதில்லை. அப்பெருங்குறை தீரவே அற்புதமான வியாக்கியானம் விசதவாக் சிகாமணிகளான மாமுனிகள் இட்டருளினது. அந்த வியாக்கியானத்தை யநுஸரித்து விவரிக்கிறேனிங்கு.

52. குற்றம் செய்தவர்களிடத்தில் பொறுமை காட்டவேணும். அதாவது எதிரிகள் செய்யும் தூஷணை முதலான குற்றத்திற்காகச் சிலர் உடனே பதில் தண்டனை செய்யக்

கூடும்; அது செய்ய சக்தியில்லாதவர்கள் 'இந்த மஹாபாபி இப்படி அபராதப் பட்டானே!' என்று நெஞ்சு புண்பட்டிருக்கக்கூடும். இவ்விரண்டு படியுமன்றிக்கே அவர்கள் பட்ட அபராதத்தை ஸஹித்திருக்கவேணும். ப்ரதிக்ரியை பண்ண நினையாமலும் நெஞ்சு கன்றுமலுமிருக்க வேணுமென்கை. இதுதான் அபராத ஸஹிஷ்ணுத்வம்.

53. குற்றம் செய்தவர்களிடத்தில் க்ருபை காட்டவேணும். அதாவது, கீழ்ச் சொன்னபடி ஸாத்விகரானவிவர் ஸஹித்துக் கொண்டிருந்தாலும் 'அரசன் அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும்' என்கிறபடியே தெய்வம் தண்டிக்கிறதே தீருமன்றோ; அதில் ஸந்தேஹமில்லையே; நாஸ்திகர்களுக்கு இதில் விப்ரதிபத்தியிருந்தாலும் ஆஸ்திகர்கள் இதைத் திண்ணமாக எண்ணியிருப்பர்களே; அதனால் ஐயோ! நாம் பொறுத்திருந்தாலும் பொறுத்திருக்கமாட்டாத தெய்வம் இவன் தலையில் இடிவிழுந்தாற்போலே அனர்த்தங்கள் விளையும்படி செய்யுமே; இதற்கு என்ன பண்ணுவோம்!' என்று இரக்கங் கொண்டிருக்க வேணுமென்கை. இங்கே மணவாள மாமுனிகளின் ஸ்ரீஸூக்தி—"நாம் பொறுத்திருந்தோமாகிலும் எம்பெருமான் உசிததண்டம் பண்ணவன்றோ புகுகிறான், ஐயோ! இனி இதுக்கு என் செய்வோம்! என்கிற பரது:க்காஸஹிஷ்ணுத்வம்" என்பதாம்.

54. குற்றம் செய்தவர்களிடத்தில் சிரிப்பு காட்டவேணும். இது வெகு ஆச்சரியமான ஸ்ரீஸூக்தி. எதற்காகச் சிரிக்கவேணும்? என்னவென்று சிரிக்கவேணும்? என்று கேட்டால், குற்றங்களே வடிவெடுத்த இந்தப் படுபாவி வெட்கமில்லாமல் பிறரை தூஷிக்கப் புறப்படுகிறானே யென்று சிரிக்கவேணுமென்பர் சிலர்; ஜநந்யாசார்யரும் தமது வியாக்கியானத்தில் இங்கு ஏதோ எழுதிவைத்திருக்கிறார். இங்கு மணவாளமாமுனிகளின் அற்புதமான திவ்ய ஸூக்தி காணீர் "அத்ருஷ்ட விரோதமாக இவர்களால் செய்யலாவ தொன்றில்லையிறே: பாருஷ்யாதி முகத்தாலே க்யாதிலாபாதி த்ருஷ்ட விரோதங்களிறே இவர்களால் செய்யலாவது' அப்படி சிலவற்றைச் செய்தால் தங்களோபாதி நாமும் இவற்றிலே சபலராய் இவற்றினுடைய ஹாநியைப் பற்ற நெஞ்சாறல் பட்டுத் தளர்வுதோ மென்றிருந்தார்களன்றோ! இவர்களின் அறிவிலித்தன மிருந்தபடி என்! என்று பண்ணும் ஹாஸம்." என்று. இந்த ஸ்ரீஸூக்தியின் மாதுர்யத்தையும் காம்பீர்யத்தையும் யாரே காணவல்லார்! மூலவக்தாவான பிள்ளை லோகாசார்யருடைய திருவுள்ளக் கருத்தை அப்படியே அநுஸந்திக்தமாகவன்றோ காட்டியுள்ளார்.

இதைச் சிறிது விவரிப்போம். தூஷிப்பவர்கள் என்ன கருத்தினாலே தூஷிக்கிறார்களென்று பார்க்கவேணும். எந்த நபரை தூஷிக்கிறார்களோ அந்த நபருக்குச் சில நஷ்டங்களை யுண்டுபண்ண வேணுமென்கிற எண்ணங்கொண்டே தூஷிக்கிறார்களென்பதில் ஸந்தேஹமில்லை. நஷ்டம் இருவகைப்படும்; (1) அத்ருஷ்டத்தில் நஷ்டம். (2) த்ருஷ்டத்தில் நஷ்டம். (1) ஆமுஷ்மிக புருஷார்த்தத்தில் கெடுதி விளைவது அத்ருஷ்டத்தில் நஷ்டமெனப்படும். (2) இவ்வுலகில் சிலர் நம்மிடத்தில் கௌரவம் வைத்திருந்தால் அது மாறும்படியாகச் செய்வதும், யாரேனும் நமக்கு ஸன்மானங்கள் செய்வதாயிருந்தால் அல்லது செய்து கொண்டிருந்தால் அதைத் தவிர்ப்பதும் த்ருஷ்டத்தில் நஷ்டமெனப்படும். ஆக இப்படிப்பட்ட நஷ்டங்களில் அத்ருஷ்டத்தில் நஷ்டம் சிறிதுமுண்டாகாதென்பது திண்ணம். ஆனால் த்ருஷ்டத்தில் நஷ்டம் உண்டு பண்ண முடியும். அதாவது பலர் திரண்டிருக்குமிடங்களில் நிஷ்காரணமாகப் பருஷோக்திகளை வாரியிறைத்து தூஷிப்பதனால், தூஷிக்கப்பட்ட வ்யக்தி

விசேஷத்தினிடத்தில் உலகர் வைத்திருக்கிற மதிப்பு குறையக் கூடும்; அவர்கள் செய்ய நினைத்திருக்கிற (அல்லது) செய்து கொண்டு வருகிற ஸன்மானங்களும் தொலையக்கூடும். ஆக இப்படிப்பட்ட த்ருஷ்ட நஷ்டங்கள் உண்டாகக் கூடுமென்று வைத்துக் கொள்வோம். இது தவிர வேறுவிதமான நஷ்டம் ப்ராக்ருதர்களின் தூஷணைகளினால் உண்டு பண்ண முடியாதென்பது திண்ணம். இப்படியாக இவர்களுண்டாக்கும் நஷ்டத்தினால் நாம் கஷ்டப் படுவோமென்றல்லவா இந்த தூஷகர்களின் நினைவு; அந்தோ! இவர்கள் நம்மையும் தங்களைப் போல நினைத்து விட்டார்களே! ப்ராக்ருதர்களால் வரும் மதிப்பும் ஸத்காரமும் நமக்கு த்ருணப்ராய மென்பதை இந்த அவிவேகிகள் தெரிந்து கொள்ளவில்லையே! ப்ராக்ருதர்களின் இகழ்வும் வெறுப்பும் அதிகரிக்க அதிகரிக்க, அதையே நாம் மிகுந்த ச்ரேயஸ்ஸாகக் கொண்டிருக்கிறோமென்பதை இந்த அறிவிலிகள் அறிந்து கொள்ளவில்லையே! *உண்டியே உடையே உகந்தோடு மிம்மண்டலத் தொடுங் கூடுவதில்லை யான்* என்கிற நம்முடைய வுறுதி திடமாவதற்கே இவர்களுடைய தூஷணைகள் ஹேதுவானதை இந்த ஜடங்கள் தெரிந்து கொள்ளவில்லையே! என்று சொல்லிச் சொல்லிச் சிரிக்கவேணும்—என்பதே மாமுனிகளின் திவ்யஸூக்தி தாத்பர்யம். உண்மையில், நிந்திப்பவர்கள் விஷயத்திலே இப்படி சிரித்திருப்ப தொன்றுதான் முக்கியமானது. ஆகவே தான் பொறை முதலான ஐந்தில் இது இடையில் வைக்கப்பட்டது.

55. குற்றம் செய்தவர்களிடத்தில் உகப்பு நடக்க வேணும். (அதாவது) தூஷிக்குமவர்கள் பண்ணும் பரிபவம் சரீரத்தைச் சேருமேயொழிய ஆத்மாவைச் சேராது. ஸர்வ ப்ரகாரத்தாலும் உஜ்ஜீவித்து வாழ்ந்து போந்த ஆத்மா இவர்கள் பண்ணும் பரிபவத்திற்கு இலக்காகக் கூடியதன்றே. பாழும் சரீரந்தானே இவர்கள் பண்ணும் பரிபவத்திற்கு இலக்காமது. அந்த சரீரத்தை தத்வஜ்ஞானிகள் தங்களுக்கு சத்ருவாகவன்றோ நினைத்திருப்பர்கள். இந்த ஸ்ரீவசநபூஷணத்திலேயே இரண்டாம் ப்ரகரணத்தின் முடிவு சூர்ணையிலே "இப்படி ஸர்வப்ரகாரத்தாலும் நாச ஹேதுவான அஹங்காரத்துக்கும் அதினுடைய கார்யமான விஷய ப்ராவண்யத்துக்கும் விளை நிலம் தானாகையாலே தன்னைக் கண்டால் சத்ருவைக் கண்டாற் போலே" என்றருளிச் செய்யப்பட்டிருக்கையாலே ஸ்வசரீரம் ஸ்வசத்ரு வென்பதில் ஸந்தேஹமில்லை. உலகில் தன்னுடைய சத்ருவுக்கு ஒருவன் பரிபவத்தை யுண்டு பண்ணினால் உகப்பு உண்டாகுமன்றோ; அது போலவே ஸ்வசத்ருவான ஸ்வசரீரத்தைப் பரிபவப்படுத்துமவர்கள் திறத்திலே உகப்பு உண்டாக வேணுமென்கை. மேலும், தூஷிக்குமவர்கள் தங்களுடைய தூஷணைகளாலே த்ருஷ்டத்தில் சில நஷ்டங்களைத் தான் உண்டு பண்ண முடியுமென்று கீழே விவரிக்கப்பட்டது. அப்படி நஷ்டம் செய்யப் பெறுகிற லௌகிகப் பொருள்களை தத்வஜ்ஞாநிகள் தமக்கு மிகவும் ப்ரதிகூலங்களாக நினைத்திருக்கையாலே அப்படிப்பட்ட ப்ரதிகூலங்களைப் போக்குமவர்கள் விஷயத்திலே உகப்புக் காட்ட வேண்டியது அவசியமேயன்றோ.

56. குற்றம் செய்தவர்களிடத்தில் உபகாரஸ்ம்ருதி நடக்க வேணும். பகவத் பாகவத ஸந்நிதானங்களில் நாம் செய்யவேண்டிய காரியம் என்ன? *அமர்யாத: க்ஷுத்ரச் சலமதிர ஸூயாப்ரஸவபூ:* இத்யாதிப்படியே நம்முடைய தோஷங்களை யநுஸந்திப்பது தான் செய்ய வேண்டிய காரியம். இதை நாம் மறந்திருக்கும் ஸமயங்களிலே நம்முடைய தோஷங்களை யுணர்துமவர்களை நமக்கு உபகாரிகளாகவன்றோ நாம் நினைக்க வேண்டும். இப்படி

தோஷங்களை யுணர்த்துவது ஏகாந்தமாகவல்லாமல் மிகப் பெரிய கோஷ்டிகளிலோ புத்தகங்களிலோ பலரறியவுணர்த்துவது, ஸாமான்யமான உபகாரமா? மஹோபகாரமல்லவா? அன்னவர்களிடத்திலே நன்றி பாராட்டவன்றோ கடமைப்பட்டிருக்கிறோம். நம்மைப் பற்றிப் பிறர் எது கூறினாலும் சித்தத்தில் சிறிதும் விகாரமின்றியே உல்லாஸமாக விருக்கப் பழகவேண்டும். உண்மையில் நம்மிடத்தில் குணங்கள் மெலிந்து தோஷங்களே மலிந்து கிடக்குமாதலால் அப்படிப்பட்ட தோஷங்களை நேரிலோ மறைவிலோ எடுத்துரைப்பாருளரேல் அவர்களை நாம் நமக்கு மஹோபகாரம் செய்தவர்களாக நினைக்கவேண்டும். "குணக்ஷதலிபிக்ரமாத்" என்று வேதாந்தவாசிரியர் பணித்த முறையில் நம்மிடத்தில் ஸ்வல்ப குணங்களுமிருக்கலாம். அதைப் பிறர் பாராட்டிப் புகழவேண்டுமென்று நாம் ஆசைப்படுவது தகுதியன்று.

57. குற்றத்தைக் குற்றமாகவும் நற்றத்தை நற்றமாகவும் கொள்வதைவிட, குற்றத்தையும் நற்றமாகக் கொள்வதே நலமென்று பெரியார் கூறுவதால் இத்தகைய நலம் வாய்ந்த சில மஹான்கள் தம்முடைய வாத்ஸல்ய குணத்தின் மஹிமையினால் குற்றங்களில் சிறிதும் கண் வைத்திடாமல் நற்றமாகவே பாராட்டிப் புகழ்வர்களெனினும் அந்தப் புகழ்ச்சியில் நாம் மயங்கிவிடக்கூடாது. 'இவர்கள் நம்மிடத்திலில்லாத நலத்தை ஏறிட்டுக் கொண்டாடுகிறார்கள்' என்றே நாம் உள்ளபடி நினைக்கவேண்டும். குற்றங் குறைகளைக் கூறுமவர்களே ஸத்யவாதிகள். நம்மீது பிறர் கூறுகிற குற்றங் குறைகள் உண்மையாக நம்மிடத்தில் இல்லையென்று நாம் நினைக்கக்கூடும். ஆனால் அப்படி நினைப்பது தவறு; நம்மிடத்தில் இல்லாதவற்றைப் பிறர் சொல்லார்கள் என்றும், நமக்குத் தெரியாதபடி நம்மிடத்தில் இருப்பவைகளையே பிறர் தெரிந்து சொல்லுகிறார்கள் என்றும் நாம் நினைக்க வேண்டும்.

58. எதற்காக இப்படி நினைப்பது? நம்முடைய குற்றமோ நற்றமோ நமக்குத் தெரியாமலிருக்குமோ? பிறர் பொறாமையினாலும் மற்றும் பலவகைக் காரணங்களினாலும் நம்மீது சில பல குற்றங்களை ஏறிட்டுக் கூறினால் அவற்றை நாம் எதற்காக இசையவேண்டும்? உள்ள குற்றமாயிருந்தால் இசைந்து கொள்வோம்; இல்லாது ஏறிட்டுக் கூறுகிற குற்றமாயிருந்தால் மறுப்போம்—என்று இங்ஙனே சிலர் வாதம் செய்யக்கூடும். அன்னவர்களுக்கு நாம் சொல்லுவதாவது, "உள்ள குற்றமாயிருந்தால் இசைந்து கொள்வோம்" என்று இவ்வளவாவது சொல்லுகிறீர்களே, இதுவே பரமானந்தம்; உள்ள குற்றங்களையும் இல்லை செய்வார் மலிந்த இவ்வுலகில் உள்ள குற்றங்களை உள்ளபடி ஒப்புக்கொள்வார் சிலராவது தேறினால் ஈதொப்பதின்ப முண்டோ;

லோகாபிராம நல்வார்த்தைத்திரள் (3) முற்றிற்று.

—

4. உத்தமக்ராமஜர்க்கு உத்தமோபதேசம்

59. இதைப்பற்றி முன்னுரையில் நாமெழுதியிருப்பதை மீண்டுமொருமுறை வாசிப்பது. * துவளில் மாமணி மாடத்திலே ஆழ்வார் * உரைகொள் இன்மொழியாள் * எனப்பட்டார். திருவாய்மொழியானது எத்தனை உரைகளையுங் கொள்ளுமென்பது இதன் உள்ளுறை பொருள். இவரும் ஓர் உரையெழுத உருசிகொண்டாரென்றால் இதில் தவறொன்றுமில்லை. இவர் தம்மினத்தவரால் இயற்றப்பட்ட திருவாய்மொழி வியாக்கியானங்கள் ஒன்பதினாயிரப்படி யென்றும் பதினெண்ணாயிரப்படியென்றும் இருபத்துநாலாயிரப்படி யென்றும் இங்ஙனே பல அச்சேறிப் பிரசுரமாகி ப்ரசாரத்திலுமுள்ளன. அவச்யமுள்ள விடங்களில் அவற்றிலிருந்து மேற்கோள்கள் காட்டியும், அவற்றில் அனுபபத்திகளிருப்பதாகத் தோன்றினால் அவற்றைக்காட்டியும் களைந்தும் இவர் உரையெழுதலாம். அந்த வழியை அறவே விட்டுத் தமக்கு நிலமல்லாத மஹா வியாக்கியானங்களை அஸ்தானே ஸ்பர்சிப்பதும் அஜ்ஞதையினால் அவற்றை தூஷிப்பதும் இவர்க்கு உற்றதன்று.

60. இங்ஙனே இவர்க்கு நாம் உபதேசிக்க வேண்டியவை பல பல வுள்ளன. அவற்றுக்கு ஸமயாந்தரத்தில் அவகாசம் நேரும். ப்ரக்ருதம், கேசவன்தமரில் * விட்டிலங்கு செஞ்சோதி யென்கிறபாட்டினுரையில் இவர் செய்திருக்கும் ப்ரஸங்காதிக்ரமத்தைப் பற்றி மட்டும் பேசுவோம்;

61. இப்பாசுரத்தின் ஈட்டு அவதாரிகையிலுள்ள ஸ்ரீஸூக்திகளாவன;—"திருமாலையாண்டானோடே எம்பெருமானார் திருவாய்மொழிகேட்டருளுகிறநாளில் பாட்டுக்கள்தோறும் சிலவார்த்தைகளையருளிச்செய்து இது அர்த்தமானாலோவென்றால், 'இது விச்வாமித்ர ஸ்ருஷ்டி, ஆளவந்தாரருளிச்செய்யக் கேட்டறியேன்' என்று பணிக்குமாமாண்டான்; ஆண்டான் இப்பாட்டுக்கு விச்வாமித்ரஸ்ருஷ்டி வேண்டாவாயிருந்ததீ! யென்ன; இப்பாட்டால் தன் அவயவ ஸௌந்தர்யத்தாலே என்னைத் தனக்காக்கினானென்கிறார் என்றருளிச்செய்தருளினாராம். அதுவுங்கிடக்க, பட்டருளிச்செய்ததொன்றுண்டு—ஆழ்வாரையும் ஆழ்வார் பரிகரத்தையும் விஷயீகரித்து அத்தாலே திருமேனியிற் பிறந்த ஔஜ்ஜ்வல்யத்தைச் சொல்லுகிறது" (ஆக இவை ஈட்டு ஸ்ரீஸூக்திகள்.)

62. இப்பாட்டிற்கு அடியேனுடைய திவ்யார்த்ததீபிகையுரையையு மிங்குத்தருகிறேன்.

திருமாலையாண்டான் பக்கலிலே எம்பெருமானார் திருவாய்மொழி கேட்டருளுங் காலத்தில் பாசுரந்தோறும் எம்பெருமானார் விலக்ஷணமாக ஒவ்வொரு அர்த்த விசேஷம் தாம் சொல்லி 'இப்படியிருக்கலாமோ?' என்பராம்; ஆண்டான் அதுகேட்டு 'இது விச்வாமித்ர ஸ்ருஷ்டியாயிருக்கிறது; ஆளவந்தா ரருளிச்செய்ய நான் கேட்டதில்லை' என்று ஸாதிப்பராம். இப்பாசுரம் வருகையில் எம்பெருமானார் ஒன்றும் ஸாதியாமல் இருக்கக் கண்ட ஆண்டான் 'இப்பாட்டில் விச்வாமித்ர ஸ்ருஷ்டி ஒன்றுமில்லை போலும்!' என்று புன்முறுவலோடே கேட்டுவிட்டாராம். எம்பெருமான் தன்னுடைய திருமேனியழகைக் காட்டி ஆழ்வாரைத் தனக்காக்கிக் கொண்டமையை இப்பாட்டில் சொல்லுவதாக ஆள

வந்தாரருளிச் செய்தபடி. உடையவரும் இப்படியே அருளிச் செய்துவந்தார்; பட்டர் அருளிச் செய்யும்போது, 'ஆழ்வாரையும் ஆழ்வாருடைய ஸம்பந்திகளையும் விஷயீகரித்து அத்தாலே எம்பெருமானது திருமேனியிற் பிறந்த புகரைச் சொல்லுகிறது' என்பராம். எம்பெருமானுடைய வடிவழகைக் காரண கோடியிலே நிறுத்தி ஆளவந்தாருடைய நிர்வாஹம். அந்தக் கார்ய கோடியிலே நிறுத்தி பட்டருடைய நிர்வாஹமென்று வாசி காண்க. பன்னீராயிரப்படி யுரையில்—"இப்பாட்டில் முதலடியில் விட்டு வென்று திருநாமமாகப் பிரித்து, விட்டிலங்கு முடியம்மானென்று நாலாமடியோடே அந்வயித்துக் கிடக்கிறது; அல்லாதபோது, திருநாமம் முதலாக எழுகிற பாட்டுக்களின் மர்யாதை குலையும்." என்கிற வாக்கியங்கள் காணப்படுகின்றன. இதற்குப் பெரியோர்கள் அருளிச் செய்வதாவது—பாட்டின் தொடக்கத்திலுள்ள விட்டு என்பதை 'விஷ்ணு' என்கிற பதத்தின் விகாரமாகவே கொள்ளவேணுமென்கிற நிர்ப்பந்தமில்லை. கேசவாதி நாமங்கள் பாசுரந்தோறும் வரவேணுமென்கிற இவ்வளவு நியமமே யுள்ளது. இப்பாட்டில் மதுசூதனனென்கிற திருநாமம் வந்துவிட்டது. கீழ்ப்பாட்டில் வந்த விஷ்ணுநாமம் இப்பாட்டிலும் வரவேணுமென்கிற நியதியில்லை. அப்படி நியதிகொண்டாலும் பாட்டின் ஆதியில் விட்டு என்றிருப்பதால் அது அர்த்தசக்தியால் விஷ்ணு போதகமாகாவிடினும் சப்தசக்தியால் விஷ்ணுப்ரத்யபிஜ்ஞாபகமாகக் குறையில்லை. திருவெழுகூற்றிருக்கையில் இருமலர், நால்வாய், இருநீர், ஆறுபோதி என்றிவை முதலான பதங்கள் அர்த்தசக்தியாலன்றிக்கே சப்த சக்தியால் மாத்திரம் எண்களைக் குறிப்பிடுகின்றமை இதற்கு நிதர்சநமாகக் கொள்ளத்தகும். ஆகவே, ஈடு முப்பத்தாறாயிரப்படியி லருளிச் செய்கிறபடி பாக்ஷிக நிர்வாஹமே பொருந்தும் என்று. ஒன்பதினாயிரப்படியிலும் இருபத்துநாலாயிரப்படியிலும் விட்டு என்கிற சொல் நான்கடிகளிலும் ஸமரூபமாகவே கொள்ளப்பட்டிருக்கின்றமையும் அறியத்தக்கது. (இது நமது தீபிகை.)

63. இதற்குமேல் உத்தமக்ராமஜர் எழுதியிருப்பதைக் காண்மின்;—

"இங்கோர் ஐதிஹ்ய மீட்டிலுள்ளது—திருமாலையாண்டான் பக்கல் எம்பெருமானார் திருவாய்மொழியின் பொருள் கேட்டு வரும்போது பாட்டுக்கள் தோறுமே 'இது அர்த்தமானலோ' என்றவாறு விண்ணப்பம் செய்வராம். அவரும், 'இது விச்வாமித்ர ஸ்ருஷ்டி; ஆளவந்தார் அருளிச் செய்யக் கேட்டறியேன்' என்று பணிப்பராம். அவ்வாண்டான் இங்கே, இப்பாட்டுக்கு விச்வாமித்ர ஸ்ருஷ்டி வேண்டுவதில்லை போலுமென்றாராம். தன் ஸௌந்தர்யத்தாலே ஆழ்வாரைத் தனக்காக்கினது இங்கு கூறப்படுமென்று அங்கே அருளிச் செய்தது. இதில் ஆளவந்தார் அருளினதும் எம்பெருமானார் அருளினதும் ஒன்றேயாயிற்றென்பர் சிலர். எம்பெருமான் மேவும் தன்மையாக்கினதைக் கண்டு மகிழ்ந்து ஏத்துகிறாரென்று ஆளவந்தார் அருளினதாகவும், மேவச் செய்தது ஸௌந்தர்யத்தாலே என்பதற்கு இப்பாசுரமென்று எம்பெருமானார் அருளினதாகவும் சிலர் கொள்வர். எந்த அழகைக் கொண்டு மேவச் செய்தானோ, அவ்வழகை யெடுத்துரைக்கிறாரென்றால் எல்லாம் சொன்னதாம். ஆக எல்லாமொன்றே. இங்கே விச்வாமித்ர ஸ்ருஷ்டி எம்பெருமானாரை விட்டு பட்டரிடம் நின்றது. ஆண்டான் எழுந்தருளியிருந்தால் அருளியிருப்பர்."

64. இந்த வாக்ய ராசியில் "என்பர் சிலர்;....சிலர் கொள்வர்" என்பவற்றில் விவக்ஷிதமானதை அவராவது அறிந்துகொண்டிருந்தால் போதும். அது எப்படியாவது கிடக்கட்டும்;

65. "இங்கே விச்வாமித்ர ஸ்ருஷ்டி எம்பெருமானாரை விட்டு பட்டரிடம் நின்றது." என்ற வார்த்தை விரலுக்குத் தகாத வீக்கமெனத் தகும். மேலே "ஆண்டான் எழுந்தருளி யிருந்தால் அருளியிருப்பர்" என்றதற்குத்தான் என்ன அர்த்தமோ? எம்பெருமானார் திருமாலையாண்டான் பக்கலில் திருவாய்மொழி கேட்டதில்லை யென்கிறாரா இவர்? அல்லது, திருவாய்மொழிப் பொருள் கேட்கும்போது இது விச்வாமித்ர ஸ்ருஷ்டியென்று ஆண்டான் சொல்லும்படியாக நடந்ததில்லை யென்கிறாரா? எதுவும் சொல்லப் போகாதிவர்க்கு.

66. திருமாலையாண்டான் பக்கலிலே திருவாய்மொழி கேட்டதை வேதாந்தவாசிரியர் குருபரம் பராஸாரத்தில் பொறித்து வைத்திருக்கையாலே அது சொல்லப் போகாது. ஆண்டான் விச்வாமித்ர ஸ்ருஷ்டியென்னும்படியாக வொன்றும் நடந்ததில்லை யென்னில், இதுவும் வேதாந்தாசார்ய ஸூக்தி விசேஷ மறியாமையினாலத்தனை. [illegible];

67. கீதாபாஷ்ய தாத்பர்ய சந்திரிகை ஸாதிக்குமவர் *[illegible] ச்லோகத்தை விவரிக்குமிடத்து "[illegible]" என்று பணித்துள்ளார். இது ஐதிஹ்யத்தை அநுஸரித்த ஸ்ரீஸூக்தி.

68. ஐதிஹ்ய மென்னென்னில்; பின்பழகிய பெருமா ளருளிச் செய்த ஆறாயிரப்படி குருபரம்பரா ப்ரபாவத்தில் எம்பெருமானார் திருமாலையாண்டான் பக்கலிலே திருவாய்மொழி கேட்கிற செய்தியை எழுதி வருமிடத்து,

> "பின்னையும் திருவாய்மொழி தொடங்கி நடவா நிற்கச் செய்தே மீண்டும் ஓர் அர்த்த ப்ரஸ்தாவத்திலே ஆண்டான் ப்ரதிபாதித்த அர்த்தங் கேட்டு 'ஆளவந்தார் இப்படி யருளிச் செய்யார்' என்று உடையவர் விண்ணப்பஞ் செய்ய, ஆண்டானும் நீர் ஆளவந்தாரைக் கண்ணிலும் காணாதிருக்க, இப்படி யருளிச் செய்யா ரென்கை யாவதென்? என்று கேட்டருள, உடையவரும், 'நான் ஆளவந்தாருக்கு ஏகலவ்யனன்றோ' என்று விண்ணப்பஞ் செய்ய, ஆண்டானும் திருக்கோட்டியூர் நம்பி நமக்கு உரைத்தது ஒத்திருந்தது; இதுவும் ஒரு திருவவதாரம்; ஆளவந்தார் பக்கல் கேளாத அர்த்தமெல்லாம் இங்கே கேட்கப்பெற்றோம் என்று இவரைத் தெண்டனிட்டருளினார்."

என்றருளிச் செய்யப்பட்டுள்ளது. இதுவும் ஒரு காலக்ஷேப க்ரந்தமாகையாலே தேசிகன் தாம் இதை ஸாக்ஷாத்ருமுகமாக க்ரஹித்தோ ஆப்தோபதேசத்தா லறிந்தோ இது விச்வஸநீய மான ஐதிஹ்யமென்று உலகுக்கு உணர்த்த வேண்டியே இதை ஸம்ஸ்க்ருதத்தி லெழுதி வைத்தார். விச்வாமித்ர ஸ்ருஷ்டி ப்ரஸ்தாவ முண்டாகாதிருந்தால் "ஏகலவ்யோஹம்" என்று ஸ்வாமி ஸாதிக்க ப்ரஸக்தியே யில்லை. ஆக உத்தம க்ராமஜருடைய விப்ரதிபத்தி வெறுக்கத்தக்கதென்று முடிந்தது.

69. இவருடைய அஸூயா பரீவாஹ வாக்ய ராசியில் "விச்வாமித்ர ஸ்ருஷ்டி எம்பெருமானாரை விட்டு பட்டரிடத்திலே சென்று சேர்ந்தது" என்றுள்ள பரிஹாஸோக்திக்கு என்ன பொருள்? அநுபவ பரீவாஹ ரூபமான அருளிச் செயல்களில் ஆசார்யர்களின் திருவாக்கில் அர்த்த விசேஷங்கள் கரை கட்டாக் காவேரிபோலே வெள்ளங் கோத்து வருகின்றன. பட்டருடைய ரஸவத்தமான நிர்வாஹங்களில் ரஸிக்க ஸாமர்த்ய மற்ற இவர் வ்யர்த்தா பரிஹாஸோக்திகளாலே நரக வாயெயம் சேமிக்கிறாரத்தனை.

70. இந்த ப்ரகரணத்தில் இவர் கலிவியென்று ஏதோ எழுதுகிறார்; கல்வியா? கலவியா? கிழவியா? கொழுவியா? எந்தச் சொல் இவர்க்கு விவக்ஷிதமென்று விளங்கவில்லை. இதெல்லாம் ம—ர—குல ஸேவா ஸாமர்த்யாதி உ்த்தின் விளைவு என்பதில் ஐயமுண்டோ?

71. தமிழோடு ஸம்ஸ்க்ருதத்தோடு வாசியற எல்லாவற்றிலும் இவருடையது விபரீதவுணர்ச்சியே யென்பதற்கு ஒன்றே காட்டி நிற்போம். *வாமனன் பாசுரத்தின் அவதாரிகையில் * நவக்ஷ-ஷாவஸ்ய திக்ஸ்ரிதெ நழ* என்று உபநிஷத் வாக்ய முதாஹரிக்கிறார். இது அப்ரஸித்தமானதோருபநிஷத்திலுள்ளதன்று; ஸுபோஹ நாராயணா ந—வாக்கத்திலுள்ளது. க்ஸுமெநெ நழ என்று பாடமே யல்லது க்ஸ்ரிதெ நழ என்பது கர்த்தவ்யமாகக்கூட கிடையாது. (ஸிக, அந) எப்படி யிருந்தாலென்ன? என்பது ப்ராமாணிகமணிதியாகாது. ஸிதெ நழ, அமெநெ நழ என்ற மூன்றெழுத்தில் ஸ்வரபேதம் சாலவுமுண்டு. அமெநெ நழ என்றால் அநுதாத்தமும் உதாத்தமும் ஸ்வரிதமுமாகும். ஸிதெ நழ என்றால் ஸ்வரிதமும் ப்ரசயமுமாகும். உச்சாரண வடிவத்தில் நெடுவாசியுண்டாகும். முக்கிய மாக ஸ்ருதி வாக்யத்தில் ஸ்வத்ஸ கல்பனை ப்ரத்யவாய ஹேதுவாகும். எதற்கும் அஞ்சாதே வாமய-ங்களிரண்டையும் படுகொலை யடிக்கு மிவர் உய்யும் வகை காண நினைக்கில் இந்த உத்தமோபதேசத்தைக் குறிக்கொண்டு இனியாகிலும் ஆமெநதீ ஸஹவிதாமஹ:.

ஸ்ரீ காஞ்சீ அண்ணங்கராசாரிய ரெழுதிய ஸப்ததி ரத்னம் முற்றிற்று.

அன்பர்களுக்கு அறிவிப்பு.

பாரிஜாத புஷ்பமென்கிற பூதிகந்தி புஷ்பத்தைப் பற்றிக் கீழ் 18-ஆம் பக்கத்தி லெழுதி யிருப்பதைக் குறிக்கொண்மின். அந்தச் சுவடி பலர்க்குக் கிடைத்திராது. கிடைக்கப்பெற்ற சிலர் அல்ப ஸந்தோஷிகளாய் ஆரவாரிக்கக்கூடும். அன்னவர்களிலும் D. R. போன்றவர்கள் இந்த வம்புச் சுவடி காசு பொறுதென்றும், நாளை காலையே நீறாகி யொழியுமென்றும் ஆப்தர்களுக்கு அறிவித்தே தீருவர்கள். அறிவித்து மிருக்கிறார்கள். எதிரியின் ஒவ்வோரெழுத்தும் அஸங்கதம், அஸமஞ்ஜஸம், அந்ருதம், அசடுமிக்கது, பழம் பாட்டு, பண்டே பாறி யொழிந்தது என்பதை அறியாதாரில்லை. இத்தகைய அஸம்பத் தோக்திகளை எதிரி யாவதாயுஷம் பிரசுரித்துவர நிச்சயித்திருப்பதாக முடிவில் தெரிவித்து, இது அர்த்த ஸாத்யமான காரியமானதால் யாவரும் யதாசக்தி பொருளுதவி புரிய வேண்டுமென்று கோரியிருக்கிறது. இதற்கு நாம் தெரிவிப்பதைக் கேளீர். எதிரி எழுதின, மை உலருவதற்கு முன்னே அடுத்த நாளிலேயே அந்த அஸங்கதங்களை நாம் உலகுக்கு எடுத்துக் காட்டி வருகிறோம். இப்படியே யாவதாயுஷமும் காட்டுவோம். மானிடர்களுக்கு மறப்பு என்பது ஸஹஜமாதலால் நமது நூல்களிலுள்ள விஷயங்கள் வித்வான்களுக்கு மறந்து போகுங் காலத்தை யெதிர்பார்த்து இரண்டு வருடம் மூன்று வருடம் தாமதித்து அஸங்கத அந்ருத பாஷணங்களை வெளியிட்டு வருகிற எதிரிக்கு வேண்டிய பொருளுதவியை நாமே செய்வோம். வேண்டியமட்டும் செய்வோம். ஐயுற வேண்டா.

'மதுராந்தகம் ஸம்ஸ்க்ருத காலேஜில் வியாகரண ப்ரொபஸராய் விளங்கும் ஸ்ரீ. உ. வே. பாதூர் ராகவாசார்ய ஸ்வாமியும், T. Nagar. Raosahib. S. ராகவையங்கார் ஸ்வாமியும், திருக்குடந்தை வித்வான் ப்ரவசநமணி பூவராஹாசாரும் உபய க்ரந்தங்களையும் விமர்சித்து அபிப்ராயம் தெரிவிக்கக் கடவர்கள்.

நாஹம்யாமெ ஜெவகஸாஹஸ்ரம் நவயாமெ காஅம்வாமெரும் காகணிகாம்வா நவயாமெ।
யாமெவகெஷகம் உக்கூஜ திஙா ஜம் பமயபுஜம் வஸ்த்ஸாஷம் ப்ராஜித தஜம் ம—ணதஜெழ॥
